விலை ரூபா 2–50 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 29 ஆடி 3 துல்ஹஜ்ஜா 22 இதழ் 148
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 19-7-87

### தஞ்சம் கோரிய தமிழர்களில்
## ஆயிரம் பேரை திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு முயற்சி

(புதுடில்லி)

அரசியல் தஞ்சம் கோரி சுவிர்ச்சர்லாந்து சென்ற சுமார் ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான முயற்சிகளை சுவிஸ் அரசு மேற்கொண்டு வருவதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா' சஞ்சிகை' தெரிவித்துள்ளது.

'ரைம்ஸ் ஒவ் இந்தியா'வின் கடந்த வார வெளியீட்டில் இச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக சுவிஸ் அரசின் முடிவுபற்றி சஞ்சிகை மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நிலைமைகள் சீரடைந்து வருவதால் தமிழர்கள் மீண்டும் அங்கு சென்று பாதுகாப்பாக இருக்கமுடியுமென்றும் சுவிஸ் வந்துள்ள நூற்றுக்கணக்கான தமிழர்கள் நிலைபற்றி ஆராய்ந்து விரைவில் முடிவெடுக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளது. (சி)

# இனப்பிரச்னை தீர்வுக்கான இலங்கையின் புதிய யோசனைகளுடன் டிக்ஷித் புதுடில்லி விரைவு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வுகாணுமுகமாக இலங்கை அரசாங்கம் புதிய யோசனைகளை இந்தியாவுக்கு முன்வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஜனாதிபதி ஜயவர்த்தன, அரசின் புதிய யோசனைகள் அடங்கிய விசேஷச செய்தியை இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஷித்திடம் கையளித்ததையடுத்து, அவர் நேற்று புதுடில்லி பயணமானார்.

இந்த விசேஷ செய்தியில் இனப்பிரச்னை தீர்வுக்கான புதிய யோசனைகள் அடங்கியிருக்கலாமெனத் தெரிவித்த இராஜதந்திர வட்டாரங்கள் திரு டிக்ஷித் இச்செய்தியை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் கையளிப்பார் எனக் கூறினர்.

கடந்த சில தினங்களாக இந்திய உயர்ஸ்தானிகர் திரு டிக்ஷித் இலங்கை அமைச்சர்களான லலித் அத்துலத்முதலி காமினி திஸாநாயக்கா, ஆகியோருடன் இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பது தொடர்பாக பல தடவைகள் ஆலோசனை நடத்தினர். மேலும் அவர் கடந்த செவ்வாய், வியாழன் ஆகிய இரு தினங்களில் ஜனாதிபதி ஜயவர்த்தனவுடன் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

ஜனாதிபதி ஜயவர்த்தனவுடன் வியாழக்கிழமை நடத்திய பேச்சுவார்த்தையின் போது தேசிய பந்தோபஸ்து அமைச்சர் உட்பட பதினொரு அமைச்சர்களும் பங்கு பற்றினர். இச்சந்திப்பின்போது போது இந்தியாவின் நிலைப்பாட்டை திரு. டிக்ஸித் ஜனாதிபதிக்குத் தெளி

(11 ம் பக்கம் பார்க்க)

### ஈழவர் முன்னணி ஆதரவு வழங்கும்

யாழ்ப்பாணம், சனி

"சிறிலங்கா முதலாளித்துவ அரசுக்கு எதிராக நடத்தப்படும் ஆக்கப்பூர்வமான அனைத்து போராட்ட நடவடிக்கைகளுக்கும் "ஈழவர் முன்னணி ஆதரவு வழங்கும்" என்று ஈழவர்முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்வது.

அரசுக்கு எதிராக இருபது பிரதான தொழிற்சங்கங்கள் கூட்டாக நடத்தவிருக்கும் வேலை நிறுத்தப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து விடுக்கப்பட்டுள்ள அறிக்கையொன்றிலேயே ஈழவர் முன்னணி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது (ரா)

### "பொடிபுத்த"ாவை பார்க்காமலே மகன் கொழும்பு திரும்பினர்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்திலிருப்பதாகக் கருதப்படும் முதியான்சே தென்னக்கோனை (பொடிபுத்தா பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் வந்த அவரது மகன் பண்டார தென்னக்கோன் தந்தையைப் பார்க்காமலே கொழும்பு திரும்பவேண்டியேற்பட்டதாகத் தெரிகின்றது.

திரு. பண்டார தென்னக்கோன் கொழும்புப் பத்திரிகையாளர்களிடம் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் புதன்கிழமை தனியார் பஸ் ஒன்றின் மூலம் எனது தகப்பனாரைப்பார்ப்பதற்காக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டேன் சுமார் 21 ராணுவ முகாம்

(11ம் பக்கம் பார்க்க)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

### ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

கந்தரோடை - சுன்னுகம்

ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வருகிற 2 - 8 - 87 ஞாயிற்றுக்கிழமை சங்கத்தலைவர் திரு. மூ இரத்தினம் அவர்களின் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் பி. ப.2 மணிக்கு ஆரம்பமாகும். அங்கத்தவர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்புக்கள் யாவும் தபால் மூலம் அனுப்பப்பெற்றுள்ளன.

அங்கத்தவர்களாகச் சேரவிரும்பும் அன்பர்கள் பொதுச்செயலாளருடன் 207, காங்கேசன்துறைவீதி, சுன்னுகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,

சேது.விபுலானந்தா.

18 - 07 - 87 சி-9923

### கம்பன் விழா 3-ம் நாள் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

கம்பன் விழா மூன்றும் நாள் நிகழ்ச்சி இன்று காலை பேராசிரியர் ஆ வேலுப்பிள்ளை தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்ச்சியில் "எண்களும் பெண்களும்" என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடை பெறவுள்ளது.

(11ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி செய்திகள்

### மந்திகை ஆஸ்பத்திரியில்

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் பணியாற்றும் சிற்றூழியர்கள் இராணுவ சி. ஐ. டி. யின் கடுமையான விசாரணைக்குக்குள்ளாக்கப்படுவதாகத் தெரிகின்றது.

இவ் வைத்தியசாலைக்கு நோயாளி யாராவது வந்தால் சி. ஐ. டி. யினர் அவர்மீது தீவிர விசாரணை மேற்கொள்வதுடன் அங்கு கடமையாற்றும் சிற்றூழியர்களையும் துன்புறுத்துகின்றார்களாம்.

கடந்த சில தினங்களுக்கு முன் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்ட ஒருவர் அங்குள்ள பிரஞ்சு டாக்டர் ஒருவரால் பரி

(11ம் பக்கம் பாரர்க்க)

### தமிழர்நிலை குறித்து கட்டுரை எழுதும் சுவீடன் பேராசிரியர் இலங்கைவர அனுமதி மறுப்பு

[புதுடில்லி]

இலங்கையில் சிறுபான்மைத் தமிழர்கள் படும் இன்னல்கள் குறித்து ஜெர்மன் பத்திரிகைகளில் ஆய்வுக்கட்டுரை எழுதிவரும் சுவீடன் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவருக்கு இலங்கை வர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

சுவீடனிலிருந்து இந்தியா வந்த பேராசிரியர் திரு. பீட்டர் சோல்க் அங்கிருந்து இந்தியன் எயர்லைன்ஸ் மூலம் கொழும்பு வந்தார் எனினும் இவருக்கு இலங்கையினுள்

(12-ம் பக்கம் பார்க்க)

### மாவிட்டபுரம் பகுதிக்கு நிவாரண உணவுமுத்திரை

மாவிட்டபுரம்,சனி

மாவிட்டபுரம், பழை-வீமன்காமம், மயிலிட்டி வடக்கு கிராமசேவகர் பிரிவுகளுக்கு நிவாரண உதவியும், வறுமை நிவாரண உணவு முத்திரைகளும் மல்லாகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

மாவிட்டபுரம் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு இன்று (19-7-87) வறுமை நிவாரண உணவு முத்திரைகளும், இருவார நிவா

(12ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி மக்களுக்கு விசேஷ அடையாள அட்டை

(அலுவலக நிருபர்)

வடமராட்சியிலுள்ள மக்களுக்கு பிரத்தியேக அடையாள அட்டைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

வடமராட்சியிலுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றுவோர்கள் மற்றும் அங்கு நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரால் வழங்கப்படும் இந்த அடையாள அட்டைகள் வைத்திருப்போர் கைது செய்யப்படவோ விசாரணை செய்யப்படவோ மாட்டார்களாம். ஏற்கனவே இராணுவத்தால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்

(11ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன வளர்ப்பு மீன்களும், மீன்சாப்பாடும் விற்பனைக்கு உண்டு. இரத்தின வாசா, கருவேலடி லேன், (பழைய புகையிரத வீதி) கொக்குவில் கிழக்கு. (சி 9883

நல்ல நிலையில் உள்ள 12'', 20'' கறுப்பு வெள்ளை ரெலிவிசன் நாஷனல் 7000 வீடியோ டெக் விற்பனைக்குண்டு. நாஷனல்/300, 370 7000, 2000, வீடியோ டெக் IC கள் மெக்கானிக்கல் உதிரிப் பாகங்கள், சகல அளவுள்ள ரெலிவிசன் ரியூப், ரியூனர், Fly Back IC களும் விற்பனைக்குண்டு. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி [றெயில்வேகடவையருகாமை] யாழ்ப்பாணம். [சி 9884]

Bairaha Farms பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், ChristombuFarm பிறவுண்பேட்டுக்குஞ்சுகள், Hypeco கறுப்பு சேவற்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில் [சி-9889]

சொனி K.V. 2032, M. E. 20'' கலர் ரீ. வி. 'பிலிப்ஸ்' குளிர்சாதனப் பெட்டி 'சிங்கர் 270' எலக்ரிக் தையல்மெஷின். நாஷனல் RX 5045 F ரூ இன் வண், நாஷனல் RX-FM49F, ரூ இன் வண், 'அக்காய்' VS-PIEV வீடியோ டெக், 'பிக்ஸ்ரோன்' கசட் மட்டும், 'சன்யோ' கார் ரேடியோவும், கசட்டும், ஓட்டோ றிவேர்ஸ். தொடர்பு: ரெலி வொயிஸ் என்ஜினியோர்ஸ், 184/A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 9872)

பிரம்பு ஹோல் செற். பலவித கட்டில்கள். கதிரைகள், மேசைகள், தொட்டில்கள், Cot, Screen, Cabinet, Easy-chair, Ice cream beater, Electric Cooker with oven, Ceiling/Table Fan, Cigma pump, Type writer மற்றும் பலபொருள்கள் விற்பனைக்குண்டு. பத்மநாதன், பிறிமல்டி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. சி-9874

E. N. 8332 A 50 கார் சீரமைக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு: அண்ணாமலை வைத்திய சாலை, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (9878)

இரண்டு மாத Alsation [Wormed and Weaned] நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. 96, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் (சி 9882)

பாவித்தவீட்டுத் தளபாடங்கள், கண்ணாடி அலுமாரி, சோக்கேஸ், Floor Polisher, எலற்றிக் கேற்றல், Guitar [கிற்றார்], R. X 60 National கசற் றேடியோ, Formica சாப்பாட்டுமேசை Office மேசை, Meat Safe, மேசைகள், Vono Spring Beds மற்றும் பலஉடன் மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சி-9837

Nallur Farm Centre எல்லா வகையான கோழித்தீன்கள், அரைத்தசோயா, தரமான பிண்ணாக்கு, மீன்தூள், மருந்துவகைகள், உபகரணங்கள், தரமானமுட்டைமற்றும் நாய்களுக்கும் வளர்ப்பு மீன்களுக்கும் குருவிகளுக்கும் ஏற்ற சாப்பாடுவகைகள், மருந்துகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். C/o நல்லூர் வீடியோ செண்டர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். சி-9682

## விற்பனைக்கு

குளப்பிட்டிச் சந்தி ஆனைக்கோட்டை வீதியில் நல்ல சூழலுடன் கூடிய 4¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; திருமதி ஜெகதீஸ்வரன், குளப்பிட்டி சந்தி, கொக்குவில். சி-9815

கடைச்சல் இயந்திரம் (Lathe Machine) வெல்டிங் ரூன்ஸ்போமர் (England) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: ஸ்ரார் ரேணிங் வேக்ஸ், 233, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (சி-9892]

தொல்புரம் விவசாயக் கந்தோருக்கு அருகே 15 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு தொடர்புகொள்க: சி காசி, காசிவாசம்', சுழிபுரம். [சி-9894)

3 வருட வயதுடைய Silver Grey Alsation சுத்த இன பெண் நாயும் .நல்லினப்புறுக்களும் விற்பனைக்குண்டு. மனோன்மாஸ்டர், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய் (சி-9895)

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி. ஈச்சமோட்டை வீதியில் வீட்டுடன்கூடிய காணி, வீட்டுத் தளபாடங்கள், வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: சசி டிஸ்பென்சறி, வளன்புரம். கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். [சி-9910]

நல்ல நிலையிலுள்ள CD 125 Honda மோட்டார் சயிக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:S P. செல்லத்துரை, கூழாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை வடக்கு, ஆனைக்கோட்டை. (சி 9909)

Broiler இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு K திருவருட்சோதி, திருச்செல்வம் வீதி, பலாலி றோட், கோண்டாவில். [சி-9907]

பொமேரியன் நாய்க்குட்டி கூட்டுடன், லவ் பேட்ஸ் கூட்டுடன், முயல்குட்டிகள், கட்டில்கள், கதிரைகள், மேசைகள், பீரோக்கள், ரீ. வீ ஸ்ராண்ட், கதவுநிலை, யன்னல்கள் விற்பனைக்குண்டு தொடர்பு: சுகலஷ்மி கட்டிட பொருள்கள் விற்பனைநிலையம், மாட்டீன் றோட், யாழ்ப்பாணம். [சி-9913]

## நன்றி

நவஜீவன அன்னியோன்னிய நிர்வாகியும், அன்னியோன்னிய அங்கத்தவர்களும், காலஞ்சென்ற இளைப்பாறிய மெதடிஸ்த மிசனறியும், நவஜீவன ஸ்தாபக அங்கத்தவருமாகிய சகோதரி எலிசபேத் பேக்கர் அம்மாவின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்ட நண்பர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், மலர்வளையங்கள் செலுத்தி கௌரவித்தவர்களுக்கும் மற்றும் இறுதிச் சடங்கு வைபவத்தில் சகலவிதத்திலும் உதவி புரிந்த அன்பர்களுக்கும் தங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறார்கள். தனிப்பட்ட முறையில் தொடர்புகொள்ளமுடியாததையிட்டு மனம் வருந்துகிறார்கள்.

**நவஜீவன அன்னியோன்னியம்,**
**பரந்தன்.**

(சி 9810)

## விற்பனைக்கு

நஷனல் 20'' கலர் T. V. (Cabinet Model), விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி. ஜே எஸ். என்றபிறைஸெஸ், 435/20, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். சி-9893

T. V., டெக், எயார் கொண்டிசன் எலெரிக்குக்கர், கொற்பிளேட், ரேப்ரெக் கோடர்கள், வாட்டர்பம் விற்பனைக்குண்டு. பிறிச் பெரியது, சிறியது. மோகன், கந்தரோடை, சுன்னாகம் (குளத்தடி சனசமூக நிலையத்துக்கு அருகில்) சி-9919

National gas Cooker, gas Cilinder என்பன விற்பனைக்குண்டு. இல 32, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். சி-9.19

செற்றுபாம் Bab Cock B380 பிறவுன் பேட்டுக்குஞ்சு B 300 வெள்ளை பேட்டுக்குஞ்சு(Rose புரொயிலர் 28-7-87, 31-7-87 விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். விலை: பிரவுண், வெள்ளை, புரொயிலர் 14-75 சேவல் 5 50 விலாசம்: R S K Farm, மான்ஸ் பாடசாலைரோட், முருகபதி, உடுவில். OR கண்ணாவீடியோ செண்டர், மருதனமடம். சி-9921

நல்லஇன 1 வயது நிரம்பிய அல்சேஷன் பெண் நாய் Fanta புறுக்கள் 3 சோடி குஞ்சுகளுடன் 2 துவிச்சக்கர வண்டிகள் (Grand Champion, Eastern) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: "ஞானோதயம்" குளுக்கண்டிலேன், கட்டப்பிராய் (கோப்பாய் மருத்துவமனைக்குப் பக்கமாக செல்லும் ஒழுங்கை) சி-9916

## மணப்பந்தல்

வெளிநாட்டில் நிரந்தரமாகத் தொழில் புரியும் மணமகன்களை திருமணம் செய்ய விரும்பும் மணப்பெண்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும். 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (ஏ9900)

32 வயதுடைய கத்தோலிக்க வேளாள குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் நிரந்தர தொழில் நுட்பவியலாளராக கடமைபுரியும் சுவாதி நட்சத்திரமுடைய 4ல் செவ்வாய் சூரியன் சேர்க்கையுடைய மணமகனுக்கு படித்த வெளிநாடு செல்லவிரும்பும் அல்லது கனடாவில் வசிக்கும் மணமகள் தேவை. சீதனம் மற்றும் முழு விபரங்களையும் முதல் கடிதத்தில் குறிப்பிடவும் விளம்பரஇல. சி 9875, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி 9875)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்துவேளாள சவுதியில் வேலை செய்யும் செவ்வாய்க் குற்ற மற்ற சகோதரனுக்கு அதே இனத்தைச்சேர்ந்த அரசாங்க சேவையில் வேலைசெய்யும் (ஆசிரியை விரும்பத்தக்கது) அழகிய நற்பண்புள்ள 26-32 வயதில் மணப்பெண்தேவை. புகைப்படம், சீதனவிபரம் சாதகக்குறிப்பு, குடும்பவிபரத்துடன்முதற்கடிதத்தில் தொடர்பு கொள்ளவும். ஏற்கப்படாதவை திருப்பி அனுப்பப்படும் ஆ. பத்மநாதன், 73, யாழ்வீதி, ஓமந்தை. (எ 1920)

## சேவை

பாஸ்போர்ட், ரிக்கற்றிங் விசா, பாஸ்போர்ட் புதுப்பித்தல், சர்வதேச வாகன அனுமதிப்பத்திரம் என்பன செய்து கொள்ள 'ஹரிஹரன் என்ரபிறைஸ்', 337, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். சி-9823

## தேவை

மின்தறி நெசவாலைக்கு அனுபவம்மிக்க நெசவாளர் உடன் தேவை நேரில்வரவும். தங்குமிடவசதியுண்டு. ஸ்ரீராஜ் ரெக்ஸ் இன்டஸ்றிஸ், வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தன்கேணி. [சி-9917]

வேப்பம், இலுப்பம் விதைகள் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். [எ-1925]

பயிற்றப்பட்ட / பயிற்றப்படாத மருத்துவ கலவையாளர் தேவை. பயிற்றப்படாதவர்கட்கு பயிற்சி அளிக்கப்படும். விண்ணப்பிக்கவும் நிர்வாகி, த மெடிக்கல் சென்றர், ஆனைக்கோட்டை. [சி-990.]

## சேவை

Astrologer and Palmist தங்கள் கையுடன் சாதகங்களை ஆராய்ந்து பிறநாட்டுப் பிரயாணம் பயன்பாடு, காதல் கல்யாணம் வரன்பற்றிய விடயங்களுடன், பிறநாட்டுச் சாதகங்கள் எழுதிக்கொள்ளவும்; திருமணப் பொருத்தங்கள் கிரகபாவ நிவிர்த்திக்கமையப் பார்க்கவும்; வீட்டுக்கு நிலையம் வகுத்தல், கல்வி, தொழில், தீராதநோய் மற்றும் எல்லாத் தேவைகளுக்கும் பிரச்னைகளுக்கும் தீர்க்கமான ஆலோசனை பெற அழைக்கின்றோம். இராசேந்திரன் திருவுளம்' அச்சுக்கூடஒழுங்கை, ஸ்ரேசன்றோட், கொக்குவில். சி-9918

## மூன்றுவது ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன்**
**திருநாவுக்கரசு**
**அசோகன்**

[மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவன்]

அன்னைமடியில்:
13-05-1969
ஆண்டவன் அடியில்:
19-07-1984

அன்பு மகனே!
ஆசைத் தம்பீ!!
புவனத்தில் நாளை
உந்தன்
புகழ்க்கொடியைப்
பார்க்க நின்றோம்
காலம் வரைந்த
கனிவான ஓவியமே
காலன் இடைநடுவிற்
கவர்ந்து விட்டானையா
உன் நண்பர் எம்மிடை
உலவுகின்ற வேளையிலே
அசோகா...! எங்கள்
ஆவி துடிக்குதையா!
முத்தே! நீகைநழுவி
மூன்றாண்டாய்ப்
போனதையோ!
உன்ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவனை
இறைஞ்சுகின்றோம்.

உன்பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
அண்ணா, அத்தான்,
அக்கா, அன்ரிமார்,
சித்தப்பாமார்.

'அசோகா'
தாவடி.

அயன் ஸ்ரோர்ஸ்,
மன்னார். [சி-9840]

## சேதவிவரண வீடியோபடம்

யாழ்ப்பாணம், சனி கோட்டை இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களுக்கும், பொம்மர் விமானக் குண்டு வீச்சுக்கும் இலக்கான யாழ். வர்த்தக நிலையங்களின் சேதவிபரம் சம்பந்தமான வீடியோபடம் ஒன்றை யாழ் வர்த்தக சங்கம் தயாரித்துள்ளது.

யாழ் நகர் வர்த்தக நிலையங்களின் அவல நிலையைச் சித்தரிக்கும் வகையில் ஒன்றரை மணிதியாலத்தைக் கொண்ட இந்த வர்ணப்படம் விரைவில் பத்திரிகையாளர்களுக்கும், பொது மக்களுக்கும் காண்பிக்கப்படவிருக்கிறது.

## வாடகைக்கு

காங்கேசன்துறைவீதி கொக்குவில் சந்தியில் உள்ள கிராமிய வங்கிக்கு மேலே உள்ள கட்டிடம் சகல வசதிகளும் கூடியது. தொழில் நிறுவனங்கள் ஸ்தாபனங்கள் நடத்துவதற்கு உகந்த இடம் வாடகைக்குக்குண்டு. தொடர்பு;- அ. மாணிக்கவாசகம், கே. கே. எஸ் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். சி-9869

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டையும் மக்கள்வங்கிப் புத்தகமும் வஸ்தியாம்பிள்ளை கடைக்கும் சுண்டுக்குளிக்குமிடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள: அச்சுக்கூட வீதி, இல. 7 என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சி-9908

நவரத்தினம் மார்க்கண்டு களபூமி காரைநகர் என்பவருக்குச்சொந்தமான லொறியினது [27/5086] காப்புறுதிப் பத்திரமும், வரிப்பத்திரமும், பொன்னுத்துரை மாணிக்கவாசகரது சாரதி அனுமதிப் பத்திரமும் 14-07-87 அன்று பளைக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் P. சிவராசா ஆயிலி, காரைநகர் அல்லது மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்தசன்மானம் வழங்கப்படும். சி-9885

எனது 440311482X இலக்க தேசிய அடையாள அட்டை சிறுதொகை பணத்துடன் 15-07-87ந் திகதி அராலியிலிருந்து இணுவிலுக்கு போகும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை மட்டுமாவது தயவுசெய்து ஒப்படைக்கவும். பாலேந்திரன் அஸ்பரி, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை சி-9912

**க. பொ. த.**
**உயர்தர**
மாணவர்களுக்கான
**இந்துநாகரிகம்**
(சஞ்சிகை)
**க. சி.**
**குலரத்தினம்**
ஒவ்வொரு மாணவரும்
பரீட்சையில்
சித்தியடைய
ஒரே வழி.
**விலை: ரூ. 500**
வெளியாகிவிட்டது.
**பூபாலசிங்கம்**
**புத்தகசாலை,**
யாழ்ப்பாணம்.
(ஏ 9820)

ஈழநாடு
வாரமலர்
EELANADU VARA MALAR

# அமெரிக்காவில்
# இந்தியக் கலைவிழா

விழாக்கள் வெறும் கற்பனைகளா? பெரு நதியொன்றில் ஆயிரக் கணக்கான அகல் விளக்குகள் ஒளிவீசிக்கொண்டு மிதந்து செல்கின்றன. அவற்றின் ஒளி வெள்ளம் நீர்ப் பரப்பையும், நிலப்பரப்பையும் பிரமிப்புடன் அவற்றைப் பார்த்து நிற்கும் மக்கள் கூட்டத்தையும் தெளிவாகக் காட்டி ரம்மியப்படுத்திக் கொண்டிருக்கின்றன. சில கணமே இக்காட்சி. மிதந்து சென்றவை மெதுவாக மறைத்துவிடுகின்றன. ஆனால் அவை அளித்த அற்புதக் காட்சி மக்கள் மனதில் காலம் காலமாக நிலைத்து நிற்க வைத்துவிட்டது அதனை அனுபவித்த மக்களின் மகிழ்ச்சி உற்சாகம் பிரமிப்பு இவையெல்லாம் மறக்க முடியாதவை. இப்படியானதொரு கற்பனைக் காட்சியைத்தான் அமெரிக்க மக்கள் இந்தியக் கலைவிழா அமெரிக்காவில் முடிவுற்றதும் பார்த்தார்கள். எனவே விழாக்கள் வெறும் கற்பனைகளா?

1982ம் ஆண்டு கோடை காலம் பெரிய பிரித்தானியாவில் இந்தியக் கலைவிழாவின் உச்சக்கட்டம், அமெரிக்கக் கலைப் பிரியர்களும், கலைஞர்களும் அத்லாந்திக் மகா சமுத்திரத்தைக் கடந்து பிரிட்டனின் ஹேவாட் கலாபவனம் விக்ரோறியா அருங் காட்சியகம், அல்பேர்ட் அருங்காட்சியகத்தில் நடந்துகொண்டிருந்த இந்தியக் கலை நிகழ்ச்சிகளைப் பார்க்க ஓடிக்கொண்டிருந்தனர்.

### உதங்கா

இதேவேளை மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இப்படியானதொரு விழாவை ஏன் அமெரிக்காவில் வைக்கமுடியாதென்று அமெரிக்கர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர். இவர்களது மனோநிலையைப் புரிந்து கொண்டவர்கள்போல றீகன்-இந்திரா அவர்களின் கூட்டறிக்கையில் 1985ம் ஆண்டின் நடுப்பகுதியில் அமெரிக்காவில் இந்தியக் கலைவிழா நடத்தப்படும் என்ற செய்தியும் வந்தது.

எத்தனையோ நூற்றாண்டுகளாக மேற்குலகத்தார் இந்தியாவைச் செல்வம் கொழிக்கும் நாடாகவே கருதிவந்தனர். அதன் செல்வத்தைத் தேடி ஓடிவந்த மேற்குலகத்தாரின் எண்ணிக்கை அநேகம். இந்தியாவும் ஏனைய கீழைத்தேய நாடுகளும் இன்று மேற்குலகில் உணவே உண்ணமுடியாத நிலை அன்றிருந்தது ஆனால் அண்மைக்கால அனுமானப்படி இந்தியா வறுமைமிக்க, பின் தங்கிய நாடாகவே காட்டப்பட்டுவந்திருக்கிறது.

இந்தியாவின் தலைசிறந்த கொள்கைகளான அகிம்சை, சத்தியம் போன்ற சிறந்த ஆயுதங்களால் 1947ம் ஆண்டு சுதந்திரமடைந்து மிகப்பெரிய ஜனநாயக நாடாக இருப்பதைப் பெரும்பாலான அமெரிக்கர்கள் அறிந்திருக்கமாட்டார்கள்.

இந்தியாபற்றிய அமெரிக்க மக்களின் கற்பனைச் சிறுமைகளை அகற்றி அதன் வளர்ச்சியையும் துரித முன்னேற்றத்தையும் வெளிக்கொணர்வதற்கு ஒரு நிகழ்ச்சியாக இந்தியக் கலைவிழா அமையவேண்டும் நியூயோர்க் நகரக் கண்காட்சியகம், சிமித்சோனியன் நிறுவனம், வாஷிங்டன் தேசிய கலாபவனம் ஆகிய இடங்களில் கண்காட்சிப் பொருட்களை வைப்பதற்கான ஆயத்தங்கள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

1984 ஒக்டோபர் 31ல் அன்னை இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட செய்தியறிந்து உலகமே ஓலமிட்டது. இத்துயர சம்பவத்தால் நலிந்த நாடு, விழா முயற்சியைக் கைவிட்டுவிட்டது. ஆனால் அம்மையாரின் அருந்தவப் புதல்வனும் அவரைத் தொடர்ந்து பிரதமரானவருமான திரு. ராஜீவ் காந்தி மனம் தளரவில்லை. விழாவைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஆர்வமுடன் செயற்பட்டார். இவ்விழாவின் மூலம் இந்தியாபற்றிய புதிய கொள்கைகள், புதிய தொடர்புகள் ஆகியவற்றைப் பிரதிபலிப்பதற்கான நடைமுறைகளும் சேர்க்கப்பட்டன.

1985ம் ஆண்டு ஜூன் மாதம்

(4-ம் பக்கம் பார்க்க)

## யாவும் கற்பனையா?

**சிற்சபேசன்:** எங்கிருந்து இந்தச் சத்தமும் சாவடியும்? சமையலறையிலா?

**முனிதாஸ்:** சமையலறையா? இந்துமாகடலின் நித்திலம் இது, ஆறுவது கப்பலுடன் உங்கள் செப்படிவித்தையை நிறுத்தச் சொல்லுறுங்கள்!

**சி:** இந்த மடைப்பள்ளியும் அதன் பின்னால் உள்ள வறண்ட காய்கறித்தோட்டமும் பட்டினியால் வாடும் உங்கள் [எங்கள்] வடக்கு வீதி மக்களுக்கு நிவாரணம் அளிக்குமா?

**மு:** என்னநொன்சென்ஸ! பட்டினி உங்கள் பரம்பரைச் சொத்து! தாய் பிச்சையெடுக்க தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்யலாமா?

**சி:** எங்கள் வீட்டின் தென்கோணத்தில் ஒரு சிறு அறையே நீர் குறிப்பிடும் கும்பகோணம், 25 கோணங்கள் கொண்ட விசாலமான வீடு எங்கள் வீடு. தென்கோணத்தில் ஐந்து கோடி மறவர் குடியிருக்கின்றனர். முழு வீட்டிலும் 77 கோடி, அடம்பன் கொடியும் திரண்டால்.- தெரியுமா?

**மு:** உங்கள் மிடுக்குத்தான் அன்று மிராஷ் வாகனங்களை அத்துமீறி எங்கள் வானுக்கு அனுப்ப ஏவியது?

**சி:** மிராஷ்! மயக்கம் என்பது அதன் அர்த்தம். உண்மை வெளிப்படுத்த இமயம்போல்பொறுத்திருக்கின்றோம்!

**மு:** ஐயா ஏன் வீண்விவாதம் இது உங்கள் குசினியானால் வெளியே இருப்பது அபாயம். இன்றைய கட்டிடக்கலைக்கமைய இதனை வீட்டுக்குள்ளேயே அமைத்துவிடுங்கள்.

**சி:** இடவசதி ஒருபிரசனையாகும்.

**மு:** கிச்சினுக்கு இடமில்லாவிட்டால் ஒரு கிச்சிநெற்-[Kitchenette]

# யாழ். பல்கலைக்கழகத்தில்
# விபுலாநந்தர் நினைவு
# புலமைப்பரிசில் ஒன்று
# நிறுவ வேண்டும்

தமிழ் மக்கள் செய்த தவப் பயனால் 1892ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் திகதி சாமித்தம்பிப் பெரியாருக்கும் கண்ணகை அம்மையாருக்கும் மகவாகப் பிறந்தார் மயில்வாகனன்.

1897ல் காரைதீவு தமிழ்ப் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்று 1902ல் கல்முனை மெதடிஸ் ஆங்கில பாடசாலையில் சேர்க்கப்பட்டார். குஞ்சித்தம்பி ஆசிரியரிடம் தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்ற பின் 1906ல் அர்ச் மைக்கல் கல்லூரி மாணவரானார். அங்கு பொனல் சுவாமியாரின் அன்புப்பிணைப்பு ஏற்பட்டது. 1908ல் கேம்பிரிஜ் சீனியர் பரீட்சையில் சித்தியெய்தி பின் பயிற்றப்பட்ட ஆசிரியராக அர்ச் மைக்கல் கல்லூரியில் ஆசிரியரானார். இத்துடன் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்தும் பரீட்சையில் சித்தியெய்தி பண்டிதரானார்.

இத்தனை சாதனைகளுடன் கொழும்புப் பொறியியற் கல்லூரி நடாத்தும் விஞ்ஞான டிப்புளோமா பரீட்சையிலும் வெற்றி கண்டார். 1917ல் யாழ்ப்பாணம் சம்பத்தாசிரியர் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராய் கடமையாற்றி 1920ல லண்டன் சர்வகலாசாலை விஞ்ஞானப் பரீட்சைக்குத் தோற்றி பட்டதாரியானார். ஈற்றில் எஸ் மயில்வாகனன் Trained Teacher Tamil Pundit Dip in Scienee, B sc.(London) ஆகிய பட்டங்களுடன் மானிபபாய் இந்துக் கல்லூரி அதிபரானார்.

இத்தனை கல்வியாற்றல் பெற்றபெரியார் புகழ்பெற்ற கல்லூரியின் அதிபராய் சில காலம் தொண்டாற்றி மட்டக்களப்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் பிரதேச வேறுபாடு எதுவுமின்றி தன்னாலான பங்களிப்பைச் செய்தார். ஆசிரியப் பணியில் அதிக காலம் ஈடுபடாமல் 1922ல் இராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்து பிரபோதசைதன்யராகி 1924ல் சுவாமி சிவாநந்தரது சீடராகி துறவற தீட்சை பெற்று சுவாமி விபுலாநந்தர் எனும் துறவறப் பெயரைப் பூண்டு காரைதீவு மயில்வாகனன் அகிலம் போற்றும் துறவியாகி விபுலாநந்த அடிகளானார்.

இறையியலில் ஈடுபட்ட பொழுதிலும் கல்விப் பணியைக் கைவிட்டாரில்லை. கல்வி ஒன்றின் மூலமே தமிழர் சமுதாயத்தை முன்னேற்ற எண்ணம் கொணடு அடிகளார் மீண்டு காரைதீவு திரும்பினார் 1925ல் காரைதீவு சாரதா வித்தியாலயத்திற்கும் 1926ல் மட்டக்களப்பில் சிவானந்த வித்தியாலயத்திற்கும் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்த கல்விப்பீடங்கள் இன்றும் சிறந்து விளங்குகின்றன. இவ்வாறே திரிகோணமலை சண்முகானந்தா வித்தியாலயமும் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயமுமிவர் தம்புகழை நிலைநாட்டியுள்ளன 1.30ல் இலங்கையில் உள்ள இராமகிருஷ்ண வித்தியாலயங்கட்கு முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

1931ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசிரியராய் அமர்ந்து ஈழநாட்டிற்குப் புகழ்தேடித்தந்தார். இந்த காலகட்டத்தில் தமிழ் இசையைப் பற்றிய ஆராய்ச்சியை ஆரம்பித்தார். 1933 ம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக சேவையை விட்டு நீங்கி ஈழம் திரும்பினார். இதே ஆண்டு கரந்தைத் தமிழ் சங்க 22ம் ஆண்டு தமிழ் விழாவிற்கு தலைமை தாங்கி எமக்கெல்லாம் அளவிலாப் புகழைத் தேடித்தந்த ஈழவரானார். 1935ம் ஆண்டு நடந்த சைவ சித்தாந்த மகாநாட்டிற்குத் தலைமைதாங்கியும், 19 6ல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கூடிய சொல்லாக்கப் பேரவைக்குத் தலைமை தாங்கியும் பணியாற்றியபின் 1937ல் திருக்கைலாச யாத்திரைசென்றூர் 19ა9ல் மட்டக்களப்பிற்குத் திரும்பி தமிழ்க் கலைமன்றத்தை அமைத்துச் சேவை செய்தார். 1939 - 1941வரை "பிரபுத்த பாரத" ஆசிரியராகி மாயவதித் தவப்பள்ளியில் பணியாற்றியபின் 1942ல் மதுரையில் நடைபெற்ற முத்தமிழ் மகா நாட்டிற்குத் தலைமை தாங்கியபின் ஈழம் திரும்பினர். 1943ல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதற் தமிழ்ப் பேராசிரியராகப் பதவியேற்றூர்

அடிகளாரின் பணி அனைத்திலும் சிறந்த பணி தமிழ் இசையைப் பற்றிய ஆராய்ச்சியே. கால வெள்ளத்தால் அழிந்துபோய்க்கொண்டிருந்த தமிழிசைப் பரப்பினை ஆராய்ந்து யாத்த நூல் யாழ்நூல் ஆகும். தமிழிசையை விஞ்ஞான ரீதியாக ஆராய்வதற்கு அவர் பெற்றிருந்த ஆங்கில கணித, விஞ்ஞான அறிவு உறுதுணையாயிருந்தது. பதினான்கு ஆண்டுகள் கடுந்தவமிருந்து செய்த ஆராய்ச்சியின் பயனாகக் காலவெள்ளம் அள்ளிச் சென்ற யாழிசையை மீட்டெடுத்து எமது பரம்பரைச் சொத்தான சகோட யாழ், பேரி யாழ், சீறியாழ், மகரயாழ் போன்ற இசைக் கருவிகளை அறிமுகப்படுத்தி ஏழிசைகளையும் ஒன்றுபடுத்தி யாழ்நூல் உருவிலே தந்த அரும் பணியைப்போல் ஒரு பணியை யாரால் செய்திருக்க முடியும்?

தமிழர்கட்கும், தமிழரல்லாதவர்கட்கும் தமிழ் இசையின் பண்டைப் பெருமையை எடுத்துக் கூறிய முனிவன் கொழும்பு திரும்பி 1947ம் ஆண்டு ஜூலை மாதம் 19ம் திகதி விண்ணவர்கட்கு இசை பரப்ப விரைந்து சென்றுவிட்டார். ஜூலை 21ல் அவரது பொன்னுடல் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய எல்லையுள் அமைந்த கல்லறையில் சேர்க்கப்பட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று வற்புறுத்திய அடிகளார் அது பூர்த்தியானதும் யாழ்ப்பாணத்துக்கு இன்னொரு பல்கலைக்கழகம்

[11ம் பக்கம் பார்க்க]

ஊரெழு க. முத்துக்குமாரசாமி

# இவ்வாரம் எப்படி?

### மேடம்
பெருமையின் நிழல் உங்களைத் தொடரும் நீண்டநாள் உறவுமுறிக்கப்படும். கடமை புரியும் இடத்தில் க ணியம் தேவை. தாய் வழியாலும் வேதனம்கிடைக்கலாம் பிறர் ஆதரவுமுண்டாம். வாழ்விலும் திருப்பம் ஏற்படும்.

### இடபம்
இல்லச் ோக் கை யுண்டு. இதமானவாழ்வுமுண்டு. உத்தியோக விருப்புமுண்டாம். பொருளும் தவறலாம். எதிலும் பொறுமை வேண்டும். சுகாதாரத்தைப் பேணிநடக்கவும்

### மிதுனம்
அன்னியரின் தலையீடு விவாதத்தை ஏற்படுத்தும். மின்னியல் பகுதியில் கடமைபுரிவோர் அவதானம் வேண்டும். திருப்தியற்றவாரம். தெய்வ நம்பிக்கை நன்று. மோதவரும் பகை. மோசடிகளும் இடம் பெறும் அவதானம்வேண்டும்.

### கடகம்
உத்தியோகஉயர்வுண்டு உற்சாகமாக இவ்வாரத்தைக் கழிப்பீர்கள். கு ும்ப மேம்பாடுண்டு. மிகையான ்போக்கினாலே மனதும் பாழாய்ப்போகும். திடீர் பிரயாணத்தைத் தவிர்க்கவும். துணிவே துணையெனச் செயல்படவும்.

### சிங்கம்
வித்தையில்வெற்றிகாணும். பொதுமக்கள் தொடர்புடன் புகழ்வந்துசேரும். எழுத்தாளர்களுக்கு எழுச்சிமிக்கதினம். அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர். தானிய நஷ்டமுண்டு. தெய்வ வழிபாடு நன்று.

### கன்னி
எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலேவந்து உந்தும். ஏ'ற்றத்தின் எதிரொலி பழிவாங்கும். விந்தையான போக்கு வேடிக்கைகாட்டும். சிலர் வாழ்க்கையில்புதிய நம்பிக்கை உதயமாகும். கல்வியில் நாட்டம் செலுத்துவீர்கள். சுமாரான நாள்.

### துலாம்
குறிக்கோளில்வெற்றியுண்டு. குடும்பத்திலும் தென்றல் வீசும். கடமையும் சிறக்கும். இடப்பிரிவும் ஏற்படும். பரோபரச்சிந்தை மேலிடும். எதிர்பகாராத ிக்கலில் மாட்டிக் கொள்ளுவீர்கள்.

### விருச்சிகம்
விஷபீடையுண்டு. ஆணவப்போக்கைத் தவிர்க்கவும். தொழில் சமவிருத்தியுண்டு. இதயபாரம் அதிகரிக்கும். கால்நடை விருத்தியுண்டு. பேச்சு வன்மையால் காரியத்தைச் சாதிப்பீர்கள்

### தனுசு
இரக்க மனப்பான்மை உருவாகும். நேர்முகப்பரீட்சைக்கு உகந்தவாரம். பொது விவகாரம் தலைதூக்கும். அன்னியர் உதவியுண்டு. உறவுமுறையில் பூசல்நிறைந்து காணப்படும். மனத்தளர்ச்சிக்கிடங்கொடாதிருக்கவும்

### மகரம்
ஒளிபரப்பும்வாழ்க்கை. எதிர்பார்த்த வேதனம் இவ்வாரம் கிட்டும். தொழிலிலும் செல்வாக்குப் பெருகும். சிலருக்கு நூதனரோகமும் தென்படும் சகோதரசஞ்சலமுண்டு. செலவுகளைக் கட்டுப்படுத்தவும்.

### கும்பம்
வெளியூர்புதினமுண்டு. வசதிகளும் பெருகும். குடும்பத்திலும் தென்றல்வீசும். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும். சுமுகமானவாரம்.

### மீனம்
திடீர் மோதல்கள் ஏற்படப் பார்க்கும். பயிர்ச் செய்கை பாதிக்கப்படலாம். கடன்படவும் நேரிடும். முயற்சிமுன்னேற்றம்தரும் பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணையக்கூடும். முகமன் கூறுவோர் விடயத்தில் அவதானம் வேண்டும்.

திருமலை
**க.வே.ரவீந்திரன்**

---

## வெற்றுச்சாக்கு விற்பனைக்கு

எமது சங்கத்தில் சுமார் 2500 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனையாகவுள்ளது. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/-செலுத்திப் பெற்ற விண்ணப் பப்படிவங்களில், முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 23-7-87 வியாழக்கிழமைக்கு முன்னதாக சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்குக்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடவும்.

கேள்விப்பத்திர
பண வைப்பு—ரூபா 500/-

பொதுமுகாமையாளர்,
அளவெட்டி-மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்.
(சி 1935)

---

## 31–ம் நாள் நினைவு அஞ்சலி



அமரர்
பரமலிங்கம்
நித்தியானந்தம்
B A. [Cey]

மலர்வு: 6-4-1939
உதிர்வு: 19-6-1987
திதி: 19-7-1987

சித்த நற்சுத்தியும்
தெய்வநற் பக்தியும்
சிறந்த பிரமச்சரியமும்
முத்தி மேல் நாட்டமும்
முதுசொமாய்க்
கொண்டவர்!
முதிராமல் முதிர்ந்த
கனியே!
இத்துணை இளமையில்
இருந்திட முதியர் நாம்
ஏகினுய் வானம்
அந்ேதா!
நித்தியா னந்தனே
நெஞ்செலாம்
வெந்தனம் நின்றிடு
வருவம் அங்கே
பிறந்தனை இன்பமாய்!
பிரிந்தனை துன்பமாய்
பிள்ளைகள் பலருள்
ஒன்ருய்
நிறைந்தனை பெற்றவர்
நேசநற் சோதரர்
நினைவெலாம் அமிர்த
மாஞய்
சிறந்தது சிறந்தது
நம்குடி தெய்வமாய்
செல்வ நீ வந்ததாலே
பறந்தன பறந்தன
பகட்டுகள் யாவுமே
பாலாநின் பிரிவினுலே!

பெற்ருேரும்,
சகோதரிகளும், மைத்
துனர்களும்.

61/5. பருத்தித்துறைவீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-9849)

---

## அமெரிக்காவில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

13ம்திகதி வாஷிங்டனில் தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தின்போது பிரதமர் ராஜீவ் காந்தி ஆரம்பித்து வைத்தார். இது விழாவுக்கான புதியதொரு பரிமாணத்தைக் கொடுத்திருந்தது. அமெரிக்க ஜனுதிபதியின் மனைவியும் விழாவின் போஷகருமான திருமதி நான்சி றீகனும் உடனிருந்தார்.

அமெரிக்கா திடீரென உயிர்த்துடிப்புடன் இயங்கியது ஒருபோதுமே கண்டிராத, கேட்டிராத இந்தியக் காட்சிகளும், இந்திய நடனங்களும், பாடல்களும் அமெரிக்கர்களை வியக்க வைத்தது. அமெரிக்க தேசிய கலாபவனத்தில் பெரும்பாலான இந்தியச் சிற்பங்களை வைத்திருந்தார்கள். சிமித்சோனியன் நிறுவன அரங்குகளில் இந்தியக் கலைஞர்களான் நடனங்களின் சதங்கை ஒலி, பல்வேறு இந்தியமாநிலங்களுக்குரிய சிறப்புப் பாடல்களின் ஒலி யாவும் எதிரொலித்துக்கொண்டிருந்தன.

கென்னடி நிலையத்தில் கேரள மாநிலத்தின் சிறப்பு நடனமான கதக்களியில் அனுமனுக்கும் பீமனுக்கும் இடையில் நடைபெற்ற புராணப்பிரசித்திபெற்ற நிகழ்ச்சி நடித்துக் காண்பிக்கப்பட்டது.ரவிசங்கர் சிதாரிலும் அக்பர் கான் 'சரோட்' டிலும், அல்லாரக்கா தபேலாவிலும் தங்கள் தங்கள் திறமைகளைக் காட்டிக் கொண்டனர்.

இரண்டாவது தடவையாக 1985 இலையுதிர் காலத்தில் நியூயோர்க் நகரக்காட்சியகத்தில் கி.பி 1300—1900 வரையிலான இந்திய ஓவிய சிற்டங்கள் அலங்கார வடிவமைப்புகள் வைக்கப்பட்டன. வருடமுடிவில் இதே இடத்தில் இந்தியகுஷான்சிற்பக் கண்காட்சியொன்று பிலடெல்பியாகண்காட்சியகத்தில் வைக்கப்பட்டது. பென்சில் வேனியா காட்சியகத்தில் இருந்துதெரிந்தெடுக்கப்பட்ட நூற்றுநாற்பது இந்திய ஓவியங்கள்வைக்கப்பட்டன. அதில் இருந்த ராதா—கிருஷ்ண ஓவியம், அதன்அழகு,நிறம், பௌவியம் ஆகியவற்ருல் ஆயிரக்கணக்கானேரைத் தன்னகத்தே ஈர்த்தது.

வருடமுடிவில் இதேஇடத்தில் இந்திய அரசர்களின் ஆடை அணிகலன்களின் கண்காட்சியும்இடம்பெற்றிருந்தது இந்தியாவில் முன்னர்இருந்த ராஜதானிகளில் இருந்துசேகரிக்கப்பட்ட இவ்வாடை அலங்காரங்களின் காட்சி, அவற்றின் மேன்மை, சிறப்பு,ஆடைகளின்நுட்பங்களையும் தங்கம் வெள்ளி இழை கலந்து செய்யும் ஆற்றல்களை நினைவுக்குக் கொண்டுவந்து புராதனப் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

இதே காலத்தில்தான் ஒரு வாரத்துக்கான கலைநிகழ்ச்சிகளும் ஆரம்பிக்கப்பட்டன. சுபின் மேத்தாவின்வட்டரங்கு நிகழ்ச்சி இந்தியாவைக்கௌரவிப்பதற்காக நடத்தப்பட்டது. ரவிசங்கரின் இரண்டாவது சிதார்கச்சேரியும், டாக்டர் சுப்பிரமணியத்தின் வயலின் இசையும் நடாத்தப்பட்டன.

''சூப்பர்ஹேவிற்'' கண்காட்சியகத்தில் வைக்கப்பட்ட அலங்கார சிற்பங்களும் வடிவங்களும் ரஜீஷ் சேத்திஎன்பவரால் விசேடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிற்பிகளால் செய்யப்பட்டவை. இதுமிகவும் சிறப்பான அம்சங்களில் ஒன்று. சிக்காக்கோவில் விஞ்ஞான தொழில் நுட்பக் கண்காட்சி 1985 ஜூனில் நடாத்தப்பட்டது.

இந்தியக் கலைவிழாவின் இறுதிக்கட்டம் 1986 ஆகஸ்ட் மாதம் 8ம்திகதி சான்பிரான்சிஸ் கோவில் ஆசிய கலைக்கண்காட்சி அகத்தில் தொடங்கியது இங்குதான் உன்னதமான இந்தியப் பாரம்பரியக் கலைக் கண்காட்சி ஆசியக் கலைக்கண்காட்சியகத்தில் தொடக்கி வைக்கப்பட்டது. சான்பிரான்சிங்கோவின் 25,000 மக்கள் இந்தியக் கிராமிய நடனக்காரர், பழங்குடியினரின் நடனக்காரர் ஆகியவர்களுடன் கலந்தனர். இந்தியாவின் மூலைமுடுக்கில் உள்ள கலைஞர்களில் அநேகர் சான்பிரான்சிஸ்கோவில் நிரம்பியிருந்தனர். ஆடல் பாடல்கள் உணவகங்கள் கலைப்பொருட்களின் விற்பனைக் கூடங்கள் என்பவற்றின் தாக்கத்தினுல்அமெரிக்க சொல் வழக்கில் 'மேளா' என்ற இந்தியச்சொல்லேபுகுந்துவிட்டது.

இந்தியக் கலைவிழாவினுல் ஏற்பட்ட இந்திய அலையினுல் 43 மாநிலங்களில் 185 நகரங்களில் 700 நிகழ்ச்சிகள் நடந்தேறின. செய்திநிறுவனங்களுக்கு மேலதிகமாக 1500 டொலர் வருமானம்வந்தது. 375 மில்லியன் மக்கள் அமெரிக்கப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த 180.000 சென்ரிமீற்றர் கலங்களை வாசித்தனர். மேலும் 173 மில்லியன் மக்கள் தொலைக்காட்சிமூலம் நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசித்தனர்.

விழாக்கள்சிறிதோபெரிதோ சிலநாளோ சிலமாதமோ கலையோ விஞ்ஞானமோ ஓவியமோசிற்பமோ மக்களின்உணர்ச்சிவெள்ளம் ஒன்றுகான். அவ்வளவு தூரம் இந்தியக்கலைவிழா அமெரி கமக்களைமெய் மறக்கச் செய்துவிட்டது.

மீண்டும் அதேகேள்வி விழாக்கள் வெறும் கற்பனைகளா? பலதரப்பட்ட நிகழ்ச்சிகளை கொண்ட விழாக்கள் எததனையேவகை மனங்களை ஒன்ற வைக்கின்றன ஒருதேசத்தின் கலை பண்பாடு பாரம்பரியம் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றன. ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாறல்களுக்கும் அவற்றை வளர்க்கும் மக்களின் சங்கமத்திற்கும் உதவுகின்றன. எளிமையானஅமைதிவாழ்வு வாழும் இந்திய மக்களையும் டாம்பீகமான ஆடம்பரமான வாழ்வுவாழும் அமெரிக்க மக்களையும் சிநேகபூர்வ உறவுடன் உண்டு உடுத்து உரையாடி மகிழவைத்து விட்டது இந்தியக் கலைவிழா இது உத்தியோக பூர்வமாக 1986 நவம்பர் மாதம் 8ம் திகதி சான் பிரான்சிஸ் கோவில் முடிவுற்றது. விழாமுடிந்தபோது அதனுல் ஏற்பட்ட தாக்கங்கள் காலத்தால் அழியாமல் தொடர்ந்து போய்க் கொண்டேயிருக்கும்.

---

## 31–ம் நாள் நினைவஞ்சலி



கந்தவனம்
பொன்னையா

மலர்வு: 12-12-1894
உதிர்வு: 20-6-1987

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகு எய்தி இன்று முப்பத்தொரு நாள்கள் ஆகின்றன. எத்தனை ஆண்டுகள் சென்ருலும் உங்கள் நினைவு எம்நெஞ்சை விட்டு அகலாது உங்கள் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கிறேும். தக்க சமயத்தில் உதவியவர்களுக்கு எங்கள் நன்றி.

மனைவி மக்கள்,
மருமக்கள்.

217, நாவலர்வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-9904]

---

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். நீராவியடி கடையிற் சுவாமி சமாதிச் சிவாலயத்தில் இன்று நடைபெறும் சங்காபிஷேக விழாவையொட்டி நண்பகல் அன்னதானமும் மாலை உற்சவமும் ஆத்மஜோதி நா. முத்தையாவின் சிறப்புரைஎன்பனவும் இடம்பெறும்.

[ப]

---


## யாழ்ப்பாண கல்விநிலையம்

ராமையா செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்.

[சாந்தி சினிமா முன்பாக மேல்மாடி கட்டிடத்தில் அமைந்துள்ளது]

6-ம், 7-ம், 8 ம்,9-ம். 10-ம் வகுப்புக்களுக்குரிய சகல பாடங்களும் இத்துடன் Spoken English, தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புக்களும் நடைபெறும்.

பெண்களுக்கு விடுதி வசதி அளிக்கப்படும்.

[சி-9906]

## மலிவு விலையில் புடவை

கையிருப்பு அகற்றல்

வெள்ளைப் பப்பிளின், கலர் பப்பிளின், சீத்தை
ரூபா 15/- ரூபா 16/- ரூபா 20/-

என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட தொகையே கையிருப்பில் உண்டு.

ப. நோ. கூ. சங்கம், சிறு உடுப்புக்கள் தயாரிப்போருக்கு விஷேச கழிவு உண்டு.

றேட் சென்ரர்
ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்
155, மானிப்பாய் றேட், யாழ்ப்பாணம்
(சி- 9887)

# தொடர் நவீனம்

## 2

மாலை நேரங்களில் பபியையும்பாப்பாவையும்வைத்து வீட்டில் 'தாக்காட்ட' முடியவில்லை என்றுல் கீரிமலைக் கடற்கரைக்கு அழைத்துப் போவாள். மிக அருகில் போக முடியாது! அந்தியேட்டி மடத்திற்கு இந்தப் பக்கம் நின்று கொண்டுகடலைக் காட்டுவாள்.

பபிக்கு ஒரே குதூகலமாக இருக்கும்!

''அம்மா என்னம்மா?'' என்று கேட்பாள்.

''இதுதான் கடல்... கடல்...

''என்ன நிறம் அம்மா என்ன நிறம்''

''கடல்நீல நிறம் பபிநீலம்''

''ஏனம்மா நீலம் ஏனம்மா?''

சூரிய ஒளியின் ஏழு நிறங்களில் அதிகம் சிதறும் நிறம் நீலம் என்ற விளக்கத்தை இவளுக்குச் சொன்னுல் இவள் புரிந்து கொள்வாளா என்று ஒரு கணம் சிந்திப்பாள். பிறகு சொல்வாள்.

''ஆகாயம் நீலம் அப்ப கடலும் நீலம்''

ஆகாயத்தைக் காட்டியவுடன் பபி சொல்வாள்,

''பிளேன் அப்பா ஓ!'' கைகள் இரண்டையும் விரித்துக் காட்டிச் சிரிப்பாள். அப்பா பிளேனில் ஆகாயம் வழியாகப் போயிட்டாராம!

''நாங்களும் தெதியிலை அப்பாட்டைப் போவம்...'' என்று அவளை அணைத்துக் கொண்டு கொஞ்சுவாள்வீணு.

நாங்கள் எப்ப'' போறம?'' என்று கேட்பாள் பாப்பா.

''இப்போது சிவப்பு இல்லத்தின் தலைவர் தமது இல்லக் கொடியை ஏற்றி வைப்பார்.''

சிவப்பு வீரத்திற்கும் வெற்றிக்கும் உரிய நிறம்!

அபாயமான நிறமுந்தான்; சிவப்பு விளக்குப் பிரதேசம் ஒருவரின் வாழ்வையே அபாயத்தில் தள்ளுகிற பிரதேசம்!

ஜீவன் வெளிநாட்டில் எப்படி இருப்பான்?

இங்கே இருந்த காலங்களில் ஒருநாள் கூட இவள் பக்கத்தில் படுக்காவிட்டால் உறக்கம் வராது என்று சொல்லுகிற ஜீவன்!

அவன் புறப்படும்போது விமான நிலையத்தில் வைத்து இவள் பயத்துடன் கேட்டாள்.

''இஞ்சை ஒரு நாள் கூட என்னை விட்டிட்டுப் படுக்க மாட்டீங்கள், அப்ப அங்கை போய் என்ன செய்யப்போறீங்கள்?''

அது எல்லாம்பழக்கந்தானே உங்களைப் பாத்தால் தான் மனம் அப்பிடிப் பறக்கும் நீங்கள் இல்லாத இடத்திலை எல்லாம் சரியாகிடும்''

மெதுவாய்ச் சிரித்தான் அவன்

சவூதி நாட்டுப் பெண்களின் முகத்தையே பார்க்கமுடியாது அங்கே! இங்கிருந்து சவூதிக்கு வேலைக்குப் போகிற பெண்களையும் சந்திப்பது கஷ்டம் சவூதியில் சட்டப்படி ஒழுக்கக் கேடுகள் எதுவும் நிகழ முடியாது இவை வீணுவுக்கு நிம்மதியைகொடுத்தாலும் கூட மனதிற்குள் ஏதோ ஒரு பெரும் பயம் இருந்து கொண்டே இருந்தது.

மீண்டும் அவள் கவனம் அந்தச் சிவப்புக் கொடிக்குத் திரும்பியது

எமது உணர்வுகள் எல்லாவற்றையும் தட்டி எழுப்பும் நிறம்! இரத்த திலகம் இடும் போது எமக்குள் பொங்குகிற வீரம் உணவு விடுதியின் சிவப்புச் சுவர்களினுல் எமக்குள் வெடித்துக்கிளம்புகிற பசி. சூடான நிறந்தான்! பிரமுகர்களுக்குச் சூடான வரவேற்புக் கொடுப்பதென்றுல் செங்கம்பள வரவேற்பு] சிவப்பு வெளிச்சங்களின் கீழ் வெடித்துப் பாய்கிற! சீ அப்படியெல்லாம் ஜீவனைப் பற்றிப் பயப்படக்கூடாது! பயப்படச் சந்தர்ப்பமும் வராது சவூதியில்...

ஆனலும் விரைவில் சவூதிக்குப் போய்விடுவதே நல்லது. நிம்மதியுந்தான்.

யாழ்ப்பாணத்தை விட்டு இந்த நேரத்தில் புறப்படுவது உண்மையில் வீணுவுக்கு விருப்பமில்லா விட்டாலும் கூட அவளது குடும்பம் குலைந்து போகாமல் இருப்பதற்காகப் போகவேண்டும். ஒப்பந்த காலம் முடிந்தவுடன் ஜீவனையும் அழைத்துக் கொண்டு திரும்பிவிடவேண்டும்.

ஆனல்!

சவூதிக்குப் போன புதிதில் வாரம் இரு கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்த ஜீவன் பின்னர் சில காலம் வாரம் ஒன்றுவது எழுதியவன் இப்போது மாதம் ஒன்ருய்க் குறைத்து விட்டதை எப்படி விளங்கிக் கொள்ளலாம்?

அவள் எதிர்பார்ப்புக்கள் யாவும் இதழ் உதிர்ந்த காம்பாக வெறுமைப்பட்டு நின்றது ஏன்?

பிரதம விருந்தினர் மூன்று வெள்ளை சமாதானப் புருக்களை பறக்கவிட்டார். கல்லூரி விளையாட்டுக்குழுத் தலைவனுன மாணவன் முன்னுல் வந்து பிரதம விருந்தினர் அதிபர் ஆகியோர் முன்னிலையில் ''தோல்வி வெற்றிகளை சமனுக மதித்து நேர்மையுடன் விளையாடுவோம்'' என உறுதி உரை எடுத்துக்கொண்டான்.

திருமணம் என்பதும் இப்படித்தான்- இருவரும் வாழ்விலும் தாழ்விலும் ஒன்ருகச் செல்வோம் என்று உறுதியுரை எடுத்துக்கொள்ளும் ஒரு சடங்கு!

குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறந்த வீணுவும் கடைசிப் பிள்ளையாகப் பிறந்த ஜீவனும் ஒத்து வாழ்வது உண்மையில் கடினமானதா?

விடிகாலைக்குளிரின் இங்கிதமான சூழ்நிலையில்யாரோ பனி புலராத ரோஜாப் பூக்களைப் பறிப்பதுபோல ... அவர்களது திருமணம் மிக இனிமையாகத்தான் நடந்தது. காதலிப்பவர்கள் எல்லாம் கலியாணம் செய்துகொள்வதில்லை. மனதிலே வித்திட்டு மனதிலே வளர்ந்து, கனவுகளாய் பூத்து, நினைவுகளாய் பழுத்து மனதிலேயே கருகிப் போகின்ற காதல்தான் எமது நாட்டில் சாதாரணம்! அப்படிக் கருகிப் போவதற்கு காரணமாய் சாதி சமயம், அந்தஸ்து சீதனம், பெற்றுர் விருப்பம் என்று எத்தனையோ சங்கதிகள் தலை நீட்டும்!

அந்தச் சகதிகளை எல்லாம் கடந்து காதல் வெற்றிபெறுவது ஒரு இன்ப நிகழ்வுதான்!

அவருடைய பார்வையே ஒரு கேள்வி- அல்ல பலகேள்விகள் கேட்டன.

''என்ன? மனுசியைக் காலுக்குமேலை கால் போட்டுக் கொண்டு கதைக்கவிட்டிட்டு நீ தேத்தண்ணி வைக்கிறியோ?'' என்பசே அவர்கேட்காத அந்தக் கேள்வி.

அதற்கு முன்னரும் பல தடவைகளில் அவர் ஜீவனுக்கு ஆலோசனைகள் கூறியதை அவனே வந்து வஞ்சகமில்லாமல் இவளிடம் சொல்லியிருக்கிறுன்,

''இனி உங்களுக்கு இரண்டு பொம்பிளைப் பிள்ளையளும் பிறந்திட்டுது. வேறைவேலையளைவிட்டுட்டுக் காசுசேர்க்கிற வழியளைப் பார்க்கவேணும்''


''இலட்சியங்களும் புதுமையளும் பேச்சுமேடைக்கும் ஓவியத்துக்கும் நாடகத்துக்குப் சரிவரும். வாழ்க்கைக்கு சரிவராது'.

''பொம்பிளை வீட்டு அலுவல்களைப் பார்க்கவேணும். நீ உழைக்கவேணும். நீ பெட்டைச்சி மாதிரி வேலை பார்க்கிறது பெரிய அவமானம்... ஓ''

''நாளைக்கு அடுத்த பிள்ளைச்கு உன்னைப் பால் குடுக்கச் சொல்லிக் கேட்டாலும் கேப்ப அப்ப அதுக்கும் விடப் போறியோ..? சீ...''

மெய்யே அடுத்த பிள்ளை நீயே பெறப் போருய்!'' இப்படி அன்றன்று பலப்பல ஆலோசனைகளும் கிண்டல்பேச்சுக்களும்!

பேச்சற்ற பெரு மௌனமே அப்போதெல்லாம் இவளின் அணிகலனுக இருந்திருக்கிறது. இவற்றுல் எல்லாம்




''உங்களை எல்லாம் விரைவில் அழைத்து விடுவேன்'' என்று ஆரம்பத்தில் எழுதியவன் இப்போது அதுபற்றி எதுவும் எழுதாமலே விட்டு விடுவது பற்றி...?

அன்பும், பாசமும், அருமையுங்கூடத் தூரத்தினுல் பாதிக்கப்படுகிறதா? நித்தமும் கண்டு பேசிப் பழகாத ஒருவரிடம் அன்பு வைப்பது கடினந்தானு? அல்லது..?

நாடகப் பயித்தியமான ஜீவன் இறுதியாக நடித்த ''வீரத்தீ'' என்ற நாடகத்தில் பெரிய போர் ஒன்று நடைபெற்று அதனுல் ஏற்பட்ட அழிவுகளை சிவப்பு ஒளியில் உறை நிலையில் காட்சியாக்கியது வீணுவின் மனதில் படமாகியது.

''இறுதியாக மஞ்சள் இல்லத் தலைவர் தமது இல்லக் கொடியை ஏற்றுகிறுர். அவரது கொடி கடைசியாக ஏறினுலும் கூட இதுவரை நடைபெற்ற முடிவுகளின்படி மஞ்சள் இல்லமே முதலிடத்தில் நிற்கிறது. இதோ அவ்வில்லத்தின் கம்பீரமான தலைவர்''

பணத்தின் அளவில் இறுதியில் இருக்கிற குடும்பங்கள் கூட வாழ்க்கையின் வெற்றி என்கிறஏணியில்முதலிடத்தை அடையலாம் அடைந்திருக்கின்றன.

அதற்கு எத்தனையோ முறைகள் இருக்கின்றன. ஜீவனும் அதை எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தவன்தான்...

ஆனுல் இறுதியில்...!

ஊமை அழுகையாய் அழத் தொடங்கிவிட்டிருந்த உள்ளத்தைத் திருப்பிநிகழ்வுகளில் கவனம் செலுத்தினுள் வீணு, அந்த நிகழ்வு இவளுக்கும் நடந்தது.

ஒருநாடகம் பார்த்தால்- அதைப்பார்த்துமுடிய ஒரு அமைதியும், நிம்மதியும், தளர்நிலையும், திருப்தியும் பார்வையாளனுக்கு ஏற்படவேண்டுமே ஒழிய-திணறலும் அமைதியின்மையும், பரபரப்பும்,பயமும் ஏற்படக்கூடாதென்று ஜீவன் அடிக்கடி சொல்வான். அதுவே நாடகத்தின் வெற்றி என்பான்-

அதேபோல... காதல் திருமணத்தில் முடிந்ததென்றுல் அதைத் தொடர்ந்து அவள் வாழ்வில் ஒரு அமைதியும் நிம்மதியும் தளர்நிலையும் வந்திருக்கவேண்டுமே?

ஆனுல் தொடர்ந்து அந்த உணர்வில் காலூன்றிநிற்கமுடியாமல் இது என்ன?

மேலோட்டமான உணர்வுகள் உள்ள பலருக்கு நடுவே ஆழமான உணர்வுள்ள ஒருவனுக- ஒருத்தியாக வாழ்ந்து- அவர்களிலிருந்து மனதால்மட்டும் விலகிவாழ்வது மிகக் கடினம் தான். மேலோட்டமான உணர்வுள்ளபலர்தான் அவனை மாற்றிவிட்டனரா? அவர்களில் முக்கியமானவர் ஜீவனின் மூத்த அண்ணரான திலகர்!

ஒரு நாள்!

மேற்கு வானிலே செம்மைக் கவிப்புத் தெரிந்த 'மைம்மல்' நேரம்! இவளதுசிநேகிதி லதா வந்திருந்தாள். இவள் வீட்டின் முன்புறத் தோட்டத்திலிருந்து லதாவுடன் கதைத்துக்கொண்டிருக்க, ஜீவன் உள்ளே 'ஹொற் பிளேற்றில்' தேநீருக்கு நீர் கொதிக்க வைத்து விட்டு வெளியே வருகையில் திலகர் வந்தார்.

ஜீவனை அசைக்கமுடியாது என்ற நம்பிக்கையுந்தான்.

ஆனுல். ?

''குடும்பத்தில் மூத்த பிள்ளையின் திறமைகளை தான் ஒரு போதும் எட்டிப்பிடிக்க முடியாதுஎன்ற உணர்வைக் குடும்பத்தின் கடைசிப்பிள்ளை பல தடவைபெற்றிருக்கும் ஆகவே திறமைகளை மதிப்பீடு செய்யும் உண்மையான சோதனைகளை அது எப்போதும் தவிர்த்தே வாழப்பார்க்கும்'' என்று எங்கோ படித்த நினைவு!

ஜீவனும் இந்தச் சோதனையை நேரே முகங்கொடுக்கா முடியமால் தான் சவூதிக்குப் போனுனு!'பணம் சேர்த்தல்' என்பது வெறும் வெளிக் காரணமா?அப்படியும் இருக்கலாம்!

''காசில்லாமல் எங்கடை இலட்சியத்தைக் கொண்டு எப்படி நாங்கள் பறக்கிறது?''

திருமணம் செய்யு முன்னரே பல தடவை இப்படி இவள் ஜீவனிடம் கேட்டிருக்கிறுள்.

''நாங்கள் பறக்கிறதெண்டு தீர்மானிச்சிட்டால் மேகங்களே எங்களுக்குச் சிறகாயிடும் வீணு ..'' என்று பேசிய ஜீவனைத் திலகர் தான் படிப்படியாக மாற்றிவிட்டாரா? அல்லது அவனது பதில் உண்மையில் கவிதைக்கும் கற்பனைக்கும் நாடகத்திற்கும் மட்டுந்தான் பொருத்தமற்றதா?

மாணவர்கள் இப்போது 'எபவுட்றேன்' கட்டளைக்குத் திரும்பி அணி கலைந்து தமது இல்லங்களை நோக்கி ஓடுகிறுர்கள்.

தமது வாழ்வும்அணிகலைந்து விடுமோ அல்லது அணி கலையாமற் காப்பாற்றி விடலாமோ என்பதே இவளுக்குள்ளே பெரியதோர் கேள்வியாக எழுந்து விரிகிறது.

உலக மாந்தர் முழுப்பேரினது கண்களும் திடீரென ஒரு பெரிய கண்ணுக மாறித் தமது வாழ்வையே பார்த்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு கற்பனை!

இவர்களுக்குத் திருமணமான புதிதில் கைலாசபதி அரங்கில் நடைபெற்ற நாடகம் ஒன்றுக்கு ஜீவன் இவளை அழைத்துப் போனுன். அங்கே அரங்கின் பின் திரையில் ஒரு தனிக்கண் கீறப்பட்டிருந்தது.

''உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது'' என்பதை அவர்கள் அப்படிக் காட்டுகிறுர்கள் என்று ஜீவன் விளக்கம் சொன்னுன் அப்படி ஒரு கண் இவர்களைப் பார்ப்பது போல..!

பக்கத்து வீட்டுப் பொன்தில்லையின் வாழ்வு இப்படி முடிந்து விடவில்லையா? அவனும் காதலித்துத்தானே திருமணம் செய்துகொண்டான்! பத்துப் பதினைந்து வருடமாய் மணவாழ்வு என்ற வண்டியை ஓட்டிக் கொண்டு வந்து, மூன்று குழந்தைகளும் பெற்றுக்கொண்ட பிறகு... அவன் வேலை செய்யும் இடத்திற்குப் பக்கத்தில் ஒரு இருபது வயது இளம் பெண்ணேடு வாழப் போய்விட்டானே?

மனைவியும் மூன்று பிள்ளைகளும் நடுத்தெருவில் நின்று கதறிக் கொண்டிருக்கிறுர்கள்!

தமிழ்ச்சமுதாயத்தின் குடும்பங்கள் 'ஒருவன் ஒருத்திக்கு' என்று திடமாகவும் ஒழுக்கமாகவும் வாழ்ந்த காலம் மலையேறி விடப்போகிறதா? விரும்பிய இடத்தில் விரும்பிய நேரத்தில் 'ஃப்றீ செக்ஸ்' என்ற மேற்கு நகடுகளின் கொள்கை இங்கும் பரவ முயலுகிறதா?

மேற்கு நாட்டில் எழுதப்பட்ட ''பெலிக்கன் புச்சீறிஸ்'' ஒன்று 'செக்ஸ்' பற்றிச்சொல்வதை இவள் நினைவில்கொண்டாள்,

'நவீன மனிதனுடைய அறிவு, நுண்மதி ஆகியவை அவனது இயல்பான உடல் தேவையுடன் யுத்தம் செய்கின்றன. அதனுல் அவனுக்குள் பல மனத்தடைகள் ஏற்படுகின்றன. இன்னும் விஞ்ஞான பூர்வமாகச் சொல்வதானுல் மூளை முண்ணுனுடன் யுத்தம் செய்கிறது. இதனுல் ஆரோக்கியமான பாலியல் நெறவினைகள் தொழிற்பட முடியாமல் தயங்கிப் பயப்படுகின்றன. இந்தப் பயமே தவறுகளுக்கு இடமளிக்கிறது.

இப்படியெல்லாம் போதித்ததோடு இப்படியெல்லாம் நடந்தும் வந்த அசிங்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் தானே இறைவன் ''எயிட்ஸ்'' என்ற தண்டனையை மனிதனுக்கு வழங்கியிருக்கிறுன்!

பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட தமதுபிள்ளை எதிர்ப்பால் நண்பர்கள் பலருடன் தொடர்பும் உறவும் கொள்ளாவிட்டால் அப்பிள்ளை ஏதோ குறைபாடு உடைய பிள்ளை எனக் கருதிக் கவலையுற்ற மேற்கு நாடுகளின் பெற்றோர் இப்போது தான் மெதுவாகக் கீழைத் தேசப்பண்பாடுகளைப் பற்றி அறிய விரும்புகிறுர்கள்.

[8-ம் பக்கம் பார்க்க]

## அணில் குஞ்சுத் தம்பிமார்

அணில் குஞ்சுத் தம்பிமார்
ஆகாயத்தல் பாய்கிறுர்
அம்பிப் பயல் பார்க்கவே
அடுத்தடுத்துக் கத்துகிறுர்

வாலைவாலை ஆட்டுகிறுர்
மாமரத்தில் பாய்கிறுர்
கையைப்போலக் காலைத் தூக்கி
மாம்பழத்தைப் பிடிக்கிறுர்.
வாயைவைத்துக் கடிக்கிறுர்
மரத்தின் கீழே போடுறுர்
நாயைக் கண்டு பயத்திலே
உச்சிக் கொப்பில் தாவுறுர்.

- கோப்பாய் சிவம்

# முருகையனும் புலமைநெறிக் கவிதையும்

முருகையன் அவர்களது தொடக்ககாலக் கவிதைகள் பலவற்றின் தொகுப்பாக அமைந்து நெடும்பகல் [1967] தொகுதி இத்தொகுதிக்கு முன்பே 1964ல் ஒருவரம் என்ற தொகுதியை அவர் வெளியிட்டிருந்தார் எனினும் அது தமிழாக்கக்கவிதைகளின் தொகுப்பாகவே அமைந்தமையால் நெடும்பகல் தொகுதியிலேயே அவரது சுயமான படைப்பாற்றலை இனங்காணலாம். இதில் 'நெடும்பகல்' என்ற தலைப்பில் அமைந்த ஒரு நெடும்பாட்டை தவிர முப்பத்தொன்பது தலைப்புக்களில் தனிக்கவிதைகள் உள்ளன. இவற்றுள் உதயசூரியன், ஒருவரம் என்பவை ஆங்கிலத்திலிருந்து தழுவப்பட்டவை. ஏனைய கவிதைகள் சுயம். இவற்றினூடாக முருகையன் என்ற இலக்கியவாதியைத் தூண்டிநின்ற பொதுவான உணர்வோட்டங்களையும் கவிதைப்படைப்பில் அவர் கொண்டிருந்த தன்னம்பிக்கையையும் தமிழனாகவும் அனைத்துலக மனிதனாகவும் நின்று அவர் புலப்படுத்திநின்ற நோக்குகளின் அடிப்படைகளையும் இனங்கண்டு கொள்ளமுடிகின்றது.

'எண்ணம்' என்ற தலைப்பில் அமைந்த பின்வரும் கவிதை முருகையன் என்ற இலக்கியவாதியைத் தூண்டி நின்ற ஆரம்பகால உணர்வோட்டங்களை இனங்காட்டுவது.

மண்ணிற் புழுதியிற்
பாதம் படிய
வழிநடந்தேநிச
வாழ்க்கையிலே
தண்மென்ன் றினிக்கும்
மகிழ்வினில் ஆனந்தத்
தாளங்கள் கொட்டிக்
குதூகலிக்க.
நெஞ்சை உயர்த்தி
நிமிர்ந்திட வாழ்க்கையின்
நீசத் தனத்தைப்
பயமுறுத்த
பஞ்சமுறத் துயர்
விஞ்சிடும் சோதரர்
பாடுகள் சாடும் ஓர்
பாதை செய்ய
சீறும் பவித்துயர்
மாறுமட்டும் விசும்
பேறும் முயற்சியை
ஒத்தி வைக்க
ஆறுதல் இன்றி என்
எண்ணமும் ஆவியும்
ஆர்வமும் இன்று
துடிக்குதடா.

வாழ்க்கையின் நிஜஅனுபவங்களைத் துய்த்தல், நீசத்தனங்களைக் களைந்து நல்வழி சமைத்தல், புவித்துயர் மாற்றுதல் என்பனவாக இவ்வுணர்வோட்டங்கள் அமையக்காணலாம். பரந்த மனிதநேயஅடிப்படையிலான இவ்வுணர்வுகளில் பின்னைய இரண்டுமே அவரது கவிதைகள் பலவற்றிலும் முனைப்பாக வெளிப்படலாயின என்பதைப் பெரும்பாலான படைப்புக்களில் அவதானிக்க முடிகின்றது.

முருகையன் அவர்கள் தமது கவிதைத்திறன் தொடர்பாக மிக்க தன்னம்பிக்கை உடையவராகத் திகழ்ந்தார். 'என் வாக்கு' என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் இந்நம்பிக்கை தெளிவாகப் புலப்படுகின்றது. அதிலே,

''வார்த்தைகளின் உயிர்
நிலையினை மருமத்தைக்
காண்பதற்கென்

வாழ்நாளைக் கொடுப்பதென
வாக்களித்த விட்டமையால்
பார்த்ததனைப் பார்த்தபடி
பாட்டெழுதும்வல்லமைகள்
பலபடியாஒ நாள்தோறும்
வளருவதை விரும்புகிறேன்
சீர்த்தமிழில் கவிதை என்ற
சிகரத்துச் செம்முடியைச்
செய்யாமல் ஓய்வதில்லை
என்றெழுந்த காரணத்தால்

களும் கவிதைப் படைப்புத்துறையில் நெருங்கியதொடர்பு கொண்டிருந்தவர்களுமான இவ்விரு கவிஞர்களின் ஒத்த பண்புகளில் இத் தன்னம்பிக்கையுடன் கூடிய உறுதிப்பாடு முக்கிய பங்கு வகிக்கின்றது.

மேற்படி கவிதையின் பிறிதொரு பகுதியிலே முருகையன் அவர்கள் தனது வாக்கு [கவிதை]வாழ்க்கை அனுபவப் பரப்பெல்லைகள் பலவற்றையும் தழுவி எழுவதாகப் பெருமிதங் கொள்வதையும் அவதானிக்க முடிகிறது. அப்பகுதி வருமாறு!

பேரண்டத் திரகசியப் பெற்
றியினை வியப்புகளைப்
பேசரிய விந்தைகளை ஓசையு
டன் கூறுவதும்
ஊர்கண்ட காட்சியினால்
உலகுண்டு பண்ணுவதும்
ஒளிகொண்ட புதுமைகளை
உணருங்கள், இதுகவிதை
நீர்கண்டு கொள்க என
நிறைகொண்ட சொல்
தொடுத்து
நிமிர்பண்பை அமைப்பதற்
குத் தமிழ்கண்டு பேசுவதும்
வார்மிண்டும் இளநகிலார்
வரிவண்டு விழிசுழலும்
வகைகண்டு மொழிகண்டு
வழங்குவதும் என்வாக்கு,

முருகையன் அவர்கள் கொள்ளும் இப்பெருமிதம் போலியானதல்ல என்பதற்கு அவரது பல்வேறு வகைக் கவிதைகளினதும் பொருட் பரப்புச் சான்றுகின்றது. தமிழனாகவும் அனைத்துலக மனிதனாகவும் நின்று அவர் பெற்ற அனுபவங்கள் பலவும் அவரது கவிப் பொருளாகியுள்ளன.

## தமிழன் என்ற தளத்தில்

நெடும்பகல் தொகுதியில் உள்ள கவிதைகளில் புனைவாய் புதுநூல், சரமகவிராயர், எங்கெழிலென்ஞாயிறெமக்கு, முதலியவற்றிலே அவர் தமிழன் என்ற தளத்தில் நின்று புலப்படுத்திய நோக்கு நிலைகளின் சில கூறுகளை அவதானிக்க முடிகிறது. அனைத்துலக நிலையில் நிகழ்ந்துள்ள நவீன வளர்ச்சிகளைத் தமிழ்மொழியும் தமிழர் சமுதாயமும் எய்தவேண்டும் என்று முருகையன் அவர்கள் கொண்டி

# ஈழத்துத் தமிழ்க்கவிதை வளமும் வரலாறும்—24

## கலாநிதி நா. சுப்பிரமணியன்

கூர்த்தகொழு நிலம் கீண்டு
கொழும்பயிரை
விளைப்பதுபோல்
குறைகளினை உழுதகற்றி
நிறை பயிரை விளைவிப்பேன்
'கந்தப்பர் கூறுகிறார்; கயி
ராசர் பேசுகிறார்.
கவிதை இது நல்ல' தென்று
பிறர்கருதும் படிநினைந்தே
அந்தப் படிதீர்ப்பை அளி
யாது, நான் படித்தால்
அதன் தரத்தை எடையிட
என நினைக்கும் சுயமதிப்பால்
சொந்தத்தில் எழுதியதன்
தொடை நயத்தைப்,
பொருள் நயத்தைத்
தொட்டறிந்து திறனும்
நுட்பம்அறிந்துள்ளமையால்
சந்தர்ப்பம் எங்குண்டோ
அங்கெல்லாம் வரிகோத்துச்
சர்பார்த்து விரிவாக்கும்
தன்மையுள தென்வாக்கு.

ருந்த தாகத்தின் வெவ்வேறு நிலைப்பட்ட வெளிப்பாடுகளை இவற்றில் அவதானிக்க முடிகிறது. 'புனைவாய் புதுநூல்' என்ற கவிதையில்,

புகுவாய் தமிழில் புனலா
டிடுவாய்
வெகுவாய் மகிழ்வாய்;
மிக வாழ்வுறுவாய்
தகுமா றிதுவே தரமாம்'
என நீ
புகழ்நூல் பலவும் புனை
வாய் புதிலாய்
... ... ... ...
இதுதான் அட்டா இணையா
துமிலா
விதமாய் உயர்வாய்
மிளிர் சாதனையோ?
புதிதே என யாரும்

எனவரும் பகுதிகளில் கவிதையிற் சாதனைபுரியும் தகுதியும் சுயவிமரிசனத்தகுதியும் தனக்குண்டென்பதை வெளிப்படையாகவே அவர் சுட்டியுள்ளார். ''சீர்த்தமிழில் கவிதை என்ற சிகரத்துச் செம்முடியைச் செய்யாமல் ஓய்வதில்லை'' என்ற முருகையனது கூற்றை மஹாகவியின் 'சிகரத்தை நான் அதைப்பேன்'' தொடரோடு ஒப்புநோக்கலாம். ஏறத்தாழச் சமகாலத்தவர்

புகல்வது வாய்க்
கதை ஏன் எழுதாது
கழித்தனை நாள்?
... ... ...
அஞ்ஞானம் அகன்றிட,
ஆன்ற புது
மெய்ஞ்ஞானம் விளங்கிட
விந்தை பல
இஞ்ஞாலம் அறிந்திட
ஈந்த கலை
விஞ்ஞான விருந்திடு வெல்
தமிழில்

எனவரும் பகுதிகளில் மேற்படி தாகம் நேரடியாக வெளிப்படுகின்றது தமிழ்மொழியில் இத்தகைய வளர்ச்சி நிலைகள் நிகழ்வதற்கு தடையாகவுள்ள எண்ணப்பாங்குகள், செயன்முறைகள் என்பவற்றை அங்கதச் சுவை பொருந்த வெளிப்படுத்துவனவாக 'சரமகவிராயர்' எங்கெழிலென் ஞாயிறெமக்கு? என்பன அமைந்துள்ளன.

சரமகவி என்பது தொன்மையான நடுகற் பாரம்பரியத்தின் பரிணாமங்களிலொன்று. நீத்தார் நினைவை எழுத்தில் நிலைபெறவைக்கும் இம்முயற்சி பெரும்பாலும் நீத்தாரது நிஜவாழ்வின் தரிசனமாக அமையாமல் இல்லாத பண்புகளைப் பொருத்திக்காட்டும் புனைந்துரையாக- போலியாக- அமைந்துவந்துள்ளமையை ஈழத்தின் சரம கவிப் பாரம்பரியம் காட்டும் நீத்தாரின் பண்புகள் மட்டுமன்றிப் பிரதேசச் சூழலும் புனைந்துரையாக காவியப் பண்பு பொருந்திய வர்ணனைகளுடன்- பாடப்படுவது- மரபு இவ்வாறு சடங்குச் செய்யுளாகப் பாடல் புனையும் ஒருவரைநோக்கி உரையாடும் பாங்கில் அமையும் 'சரமகவிராயர்' என்ற கவிதை, மொழியினை நிஜவாழ்வின் தரிசன ஊடகமாகக் கொள்வதற்குத் தடையாகஉள்ளமரபுபேணும் மனப்பாங்கை எள்ளிநகையாடுவதாக அமைகின்றது இதில்,

சீர்பூத்த உம்முடைய
செய்யுளில் ஐயகோ
சிவம்பூக்கும் அவம்பூக்கும்
உம்
ஊர் பூக்கும், உளம்பூக்கும்,
ஒலி பூக்கும், கலிபூக்கும்
உள்ளபொருள் எல்லாம்
பூக்கும்
பேருக்கவடிவான கவிஞரே
இவையெல்லாம்
பிழையின்றிப் பூக்கவென்று
நீர் ஊற்றும் மந்திரத்
தீர்த்தம் எங்கே பெற்றீர்?
நினைத்துச் சொல்லும்
மறந்தால்
தேனருவித் திரையெழுப்பி
வானில்வைத்திடுகிறீர்
திரிகூடராசப்பன்போல்
வானளவும் மலையென
மணற்குவியலைத்தானு
வருணித்துப் பாடுகின்றீர்
மேனிலை இருந்திழியும்
ஆறென நீர் கூறியது
மிளகாய்க்கன்றுக் கிறைக்கப்
போனவரியம் நங்கள்
போட்டவாய்க்காலையா
போங்காணும் மாவீரர் நீர்.

எனவரும் பகுதிகளில் வருணனை மரபின் போலித்தனத்தை நகையாடுவதைக் காணலாம். சரம கவிராயரை நோக்கிப் பாடப்பட்டாலும் மரபுப்பிடிக்குள் நின்று வெளிவரமுடியாமல் இலக்கிய ஆக்கத்தில் ஈடுபடும் அனைவரையும் முருகையன் எள்ளிநகையாடுவது புலனாகிறது.

'எங்கெழிலென் ஞாயிறெமக்கு!' என்ற கவிதை கலை இலக்கிய உலகைச் சீரழிக்கும் பல்வகைக் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டுவது வியாபாரத்துக்காகவும் விளம்பரத்துக்காகவும் மொழியைப் பயன்படுத்தும் சாரமற்றனவும் ஆழமற்றனவுமான செயற்பாங்குகளும் அவற்றைச் சகித்துக் கொண்டிருக்கும் சமூக மனப்பான்மையும் இக்கவிதையில் எள்ளிநகையாடப்படுகின்றன.

நாகரிகமான நகையின்
மகத்துவத்தை
தேகபலங் கொடுக்கும்
தெய்வீக லேகியத்தை
ஐந்துநாளைக்குள்ளே ஆயிரம்
ரூபாய் அளிக்கும்
மந்திரத்தை! மோதிரத்தை,
மற்றுமுள்ள கல்லுகளை
நாலுநொடிக்குள் நரையைக்
கறுப்பித்துச்
சாலவித்தை செய்கின்ற
தன்மையுள்ளமாத்திரையை
விற்றுக் காசாக்க விரும்பும்
செய்யுள் வியாபாரி
சற்றும் கூசாது தமிழ்
பாடுவித்து
பேப்பரிலே போட்டுப்
பிரசுரித்தும் அவ்வளவு
மேற்பட்ட போக்கில்
விளம்பரங்கள்
செய்வதையும்
கண்டுள்ளோம்தானே?
சும்மா எழுநூறு சொல்
எழுதி அங்கங்கே
கம்மா செமிக்கோலன்
போட்டுக்கதை என்று
தந்தாற் கிடைத்துவிடும்
சன்மானம் என்பதனால்
கைபோன போக்கிற் கதை
பண்ணித் தள்ளுகிற
தெய்வாமிசங்கள், சிறந்த
சிறுகதையின்
வேந்தர்களும் இங்கே விலை
மலிந்து காணப்படுவார்கள்
கொச்சை மொழி கொட்டிக்
குதிக்கால் ஒடித்திசையைப்
பிச்சுப்பிடுங்கிப் பிரேதம்
போல் ஆக்கிக்
கிராமக் கவிதை என்று
கீறிவிட்டு நாலுவரி
மேலும் எதை எதையோ
வீணில் விழல் அலம்பி
நாட்டுக்கலை வளர்க்க நல்ல
கட்டுரைகள்
போட்டுப்பிடிக்கும் புலவர்
மணிகளையும்
நற்றிணையில் ஏதேனும் நாலு
வரி எடுத்துச்
சிற்றுரையும் பேருரையும்
செய்து செழுங் கவிக்குச்
சாக்கடை நீர்விட்டுப்
பெருக்கிச் சரிப்பண்ணிப்
போக்கிவிட்டு நற்றிணையிற்
புக்கிருந்த சீவனையும்
'இந்தாரும் இஃதே ரசனை!'
என்று கட்டுரைகள்
தந்தார்பலரின் தரங்களையும்
நாம் அறிவோம்

எனத் தொடர்கிறது இக்கவிதை ஏறத்தாழ கால்நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கருதத்தக்க இக்கவிதை சுட்டும் நிலையிலிருந்து தமிழ் இலக்கிய உலகம் அதிகம் வேறுபட்டுவிட்டதாகக் கருதமுடியாது.

(தொடரும்)

# ஓர் இனிய பயணம்

## த. சண்முகலிங்கம்

இச் சடங்குகளைச் செய்து வைக்க பண்டாக்கள் பலர் இத்துறையில் இருக்கிறார்கள். ஒரு வருடத்துக்கு முன்னர் இறந்த எனது தாயாரின் அஸ்தியை இங்கு உரிய கிரியைகள் செய்து கங்கையில் சஞ்சயனம் [கரைத்தல்] செய்தேன்.

மணிகர்னிகா கட்டத்துக்கு அருகாமையில் மயானம் ஒன்று உண்டு. அங்கு பல பிரேதங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன. பல பிரேதங்கள் கள் எரிப்பதற்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன 50 மைல் தூரத்திலிருந்தும் பிரேதங்களை இங்கு கொண்டுவருவதாகச் சொல்லுகிறார்கள் ஒரே நேரத்தில் பலபிரேதங்கள் எரிந்தாலும் நாற்றம் இல்லை, எப்போது பிரேதம் எரிகிறதோ நிற்கிறதோ அப்போது கலியுகம் பூர்த்தியாகிவிடும் என்பது ஐதீகம்.

காசியில் இறந்தால் முத்தி என்று சொல்லுவார்கள். இங்கு இறந்தவர்களின் காதில் சிவபெருமான் தாரக மந்திரத்தை உபதேசித்து முத்தி அருள்கிறார் என்பது புராண வரலாறு. ஒருநாள் இராம கிருஷ்ண பரம கம்ஸர் கங்கையில் படகில்செல்லும்பொழுது இறந்த பிணங்களின் காதுகளில் சிவபெருமான் தாரக மந்திரம் ஓதிய காட்சியை தமது சமாதி நிலையில் கண்டாராம். அரிச்சந்திரன் காவல் செய்த மயானம் அரிச்சந்திரா கட்டத்து அருகாமையில் உள்ளது.

நாம் மணிகர்னிகா கட்டத்தில் தீர்த்தமாடி கரையிலுள்ள மணிகர்னி கேசுரையும் தேவியாரையும் தரிசித்து வணங்கி, சிறிய பாதைகள் ஊடாக விசுவநாதர் ஆலயம் சென்றோம். கோவிலுக்கு அருகில் பூசைக்குரிய சமான்கள் விற்கும் கடைகள் நிறைய உண்டு. நாம் பாலும் பூமாலையும் வாங்கிக் கொண்டு ஆலயம் சென்று விசுவநாதப்பெருமானுக்கு நாங்களே பால் அபிஷேகம் செய்து பூமாலை சார்த்தி, தொட்டு வணங்கி ஆனந்தப்பரவசம் அடைந்தோம், கோவிலில் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வருகிறது. சிறிய ஆலயம், பிரதான வாயில் தெற்குப் பக்கமாக அமைந்துள்ளது. வாசற்படிகளில் வெள்ளித் தகடு பதிக்கப்பட்டுள்ளது விமானம் [தூபி] தங்கத் தகட்டினால் வேயப்பட்டுள்ளன. நிலத்திற்குச் சலவைக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. 10 அடி 10 அடி கொண்ட சதுர கர்ப்பக்கிருகத்தின் வடகிழக்கு ஓரமாக நிலத்துக்குக் கீழே வெள்ளித்தகட்டால் ஆகிய தொட்டியில் தங்கத்தால் செய்த ஆவுடையாரோடு காட்சியளிக்கின்றார். விசுவநாதர். விசுவலிங்கம் என்றும் அழைப்பதுண்டு. 12 ஜோதிர்லிங்கங்களில் ஒன்று மேற்கு நோக்கிய மூர்த்தி. நாலு பக்கங்களிலிருந்தும் தரிசிக்கலாம். மரகதநிறமாக பிரகாசிக்கும். சிவலிங்கத்தின் முடியில் அருச்சுனன் அடித்த வில்லின் தழும்பு காணப்படுகிறது கோவிலின் உட் சுற்றுப்புறத்தில் விநாயர், மகாவிஷ்ணு, மகாலட்சுமி, அன்னபூரணி, துர்க்கை முதலிய பல சந்நிதிகள் உண்டு. பல சிவலிங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. கோவிலுக்குள் துப்பாக்கி ஏந்திய காவலர்கள் நிற்கிறார்கள்.

விசுவநாதர் கோவிலை அடுத்து ஒரு மசூதி இருக்கிறது ஓர் முகமதிய அரசன் முன்

[8ம் பக்கம் பார்க்க]

## எமது சிறுகதை

# எங்கே போவது

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

இராசசிங்கத்துக்கு கொழும்பில் பெரிய உத்தியோகம் சிவில் சேவண்ட். பல்கலைக்கழகத்தில் படிக்கும்பொழுதே ஒரு சிவில்சேவண்ட் ஆகவேண்டும் என்பதே அவரது இலட்சியமாக இருந்தது. அந்தஇலட்சியத்தைஅடைந்துவிட்டார்!

அரசாங்க உத்தியோகத்தர்கள் செல்வமும் செல்வாக்குமாக வாழ்ந்த காலம் அது. சாதாரண கிளறிக்கல் உத்தியோககாரரே காணி பூமி வீடுவாசல் என்று பொருள் தேடிக்கொண்ட காலம். சிவில் சேவண்ட் என்றால் கேட்கவேண்டுமா? கறுவாக்காட்டில் வீடு, கார், அது இது என்று கொழும்பில் தமக்கு ஒரு உல்லாச புரியையே அமைத்துக்கொண்டார் இராசசிங்கம்.

கந்தோர்வேலை ஆங்கிலத்தில் அவர் படித்துப் பட்டம் பெற்றதும் ஆங்கிலமொழி மூலம்தான். ஒஃபீசில் அவரது சகாக்களும் ஆங்கிலத்தில் விற்பன்னர்களாக இருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சிபோன பிறகும் கூட ஆங்கில மொழியின் மதிப்புப் போய்விடவில்லை. இன்னும் சற்று உயர்ந்துவிட்டது என்றுகூடச் சொல்லலாம். பெரும் பணக்காரர், பெரிய பதவி வகித்தவர்கள், நாகரிகார்ர், கொழும்புக்காரர் என்று பலருக்கு ஆங்கிலம் வீட்டு மொழியாக மட்டுமின்றி சமூக ஊடாட்ட மொழியாகவும் இருந்தது.

கந்தோரிலும் சரி, வெளியேயும் சரி அவரது சகாக்கள் அவருடன் அன்பொழுகப் பழகினர் ஹலோ சொல்லி, கையைப்பிடித்துக் குலுக்கி, தோளில் தட்டி, கட்டிப்பிடித்து ஹஹ் ஹஹ் ஹா! என்று உரக்கச் சிரித்து இன்னும்என்னென்ன வெல்லாமோ செய்து தங்களது அந்நியோன்யத்தைப் பகிரங்கமாகவே வெளிப்படுத்திக்கொண்டனர், இதில் மொழி இன மதபேதத்தற்கு இடமில்லை. அவர்கள் எல்லோரும் ஒரே வர்க்கம். ஆங்கிலத்தில் ''எலிற்'' என்று அழைக்கப்படும் சமூகத்தின் உயர்மட்ட மனித வாக்கம்.

அவர்களுடைய ஊடாட்டமெல்லாம் தங்கள் மட்டத்தில்தான் அடுத்த மட்டத்தில் உள்ளவர்களை அவர்கள் திரும்பிக்கூடப்பார்ப்பதில்லை! மதிப்பதில்லை. பொருட்படுத்துவதேயில்லை! ஐ கியூவிலும் அறிவிலும், நாகரிகத்திலும் சமூக அந்தஸ்திலும் அவர்கள் சங்களை விடத்தாழ்ந்தவர்கள் என்பது இவர்களது அசைக்க முடியாத நம்பிக்கை. சுருக்கமாகச் சொல்வதானால் அவர்கள் எல்லாருமே முற்று முழுதாக வேறுபட்ட ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுபோல இவர்களது நடைமுறை இருந்தது.

இராசசிங்கத்தினது மனைவி விஜயா யாழ்ப்பாணத்துப் பெண், அடக்கமான பெண். ஆங்கிலம் படித்தவளானலும் அதைச் சரளமாகப் பேச வராது. ஆனால் கணவனுடன் கொழும்புக்கு வந்து குடித்தனம் நடத்தத் தொடங்கிய ஒரு சில வருடங்களில்கொழும்புத் ட்ஸ் புஸ் ஆங்கிலத்தை அவள் தலைகீழாகப் பேசக் கற்றுக்கொண்டதுடன் ஒரு நவ நாகரிக நாரி மணியாகவும் ஆகிவிட்டாள். தனது மனைவி இவ்வளவு விரைவாகத் திறமையாக உயர்மட்ட சமூகத்திற்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொண்டதைக் கண்டு இராசசிங்கம் வியந்தார் பெருமைப்பட்டார்.

மேல்மட்ட மனிதர்கள். வேலை இல்லாத சோம்பேறிக் கூட்டம்! பின் வேட்க வேண்டுமா? தினமும் பார்ட்டியும் டான்சும் கேளிக்கையும் கொண்டாட்டமும் தான் நேரத்தைக் கொலை செய்ய! கந்தோரில் கணவனுக்கு மதிப்பு. இந்தக் கொண்டாட்டங்களில் விஜயாதான் ஒரு நாயகியாகத் திகழ்ந்தாள்!

லிப்ஸ்றிக் சாயம் மாறாத உதடுகள்பெண்களுடையவை. பிறண்டி, விஸ்கி மாறாதஉதடுகள் ஆண்களுடையவை. மேல்நாட்டுக் குடிவகைகள் தண்ணி பட்டபாடு. அந்தத் தண்ணிகள் போன வேகத்துக்கும் தாராளத்துக்கும் ஏற்ப செல்வாக்குகள் வளர்ந்தன, காரியங்கள் செய்து முடிக்கப்பட்டன.

சிலர் அவரை இராசசிங்கி என்பார்கள் சில வேளைகளில் திருவாளர் இராசசிங்கம் அதற்கு மறுப்புத் தெரிவிக்க மாட்டார். வெறுமனே சிரிப்பார். உண்மையில் அப்படி அழைக்கப்படுவதை அவர் விரும்பினார் என்று தான் சொல்லவேண்டும். இந்தத் தனித்துவத்தைக் காப்பாற்றுவதில் என்ன லாபம்! பெரும்பான்மைக் கூட்டத்துடன் ஒன்றித்துத் தன்னையே இழந்துவிட்டால் வாழ்க்கை எவ்வளவு சுமுகமாகப் போகும்! அதற்கும் மேலாக வேண்டியவற்றைச் செய்வித்துக்கொள்ளலாமே தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும்!

எல்லாம்சுமுகமாகப்போய்க் கொண்டிருந்தது தனிச்சிங்களச்சட்டம் இயற்றப்பட்ட பொழுது கூட அவரது நிலையில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. 58 கலவரங்கள் கூட இராசசிங்கம் குடும்பத்தைப் பாதிக்கவில்லை. அப்பொழுது கறுவாக்காடே பாதிக்கப்படவில்லையே!

அந்தக் கலவரத்தின்போது தாக்கப்பட்டதெல்லாம் கொழும்பு நகரின் எல்லைப் பகுதியில் உள்ள இடங்கள் குறிப்பாக இரத்மலானைப் பகுதி. அங்கு பாதிப்படைந்தவர்கள் எல்லாம் கறுவாக்காட்டிலுள்ள றோயல் கல்லூரிக்கு அகதிகளாகக் கொண்டுவரப்பட்டனர். அங்கு வந்தவர்கள் கப்பலில் யாழ்ப்பாணம் சென்று அங்கு சில மாதங்கள் தங்கியிருந்து மீண்டும் கொழும்புக்கு வந்தனர். உத்தியோகம் பார்க்க இராசசிங்கம் வீட்டில் இருந்தபடியே தொடர்ந்து கந்தோருக்குப் போய்வந்துகொண்டிருந்தார். ஐம்பத்தெட்டு கலகம் அவரைப் பாதிக்காவிட்டாலும் அது அவருக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுத்தது இந்தக்கொழும்பு உல்லாச வாழ்க்கை நிலைக்குமா? என்பது போன்ற பல ஐயவினாக்கள் அவரது உள்ளத்தில முதன்முதலாக எழுந்தன.



மீண்டும் சுமுகமான வாழ்க்கை. அதன்பிறகு வந்த இனக்கலவரங்களின் போது எல்லாம் தற்செயலாகவோ கடவுள் கிருபையினாலோ இராசசிங்கம் குடும்பத்தினர் ஒரு பாதிப்பும் அடையாமல் தப்பினர். ஆனால் எண்பத்து மூன்றில் தப்ப முடியவில்லை அவர்களது வீடு உடைக்கப்பட்டது, சூறையாடப்பட்டது வெறுங்கையுடன் அகதிகளாக யாழ்ப்பாணம் சென்றனர்.

வீட்டுடன் சேர்த்து அன்று அந்தக் குடும்பம் முழுவதுமே கொழும்பில் முடிந்திருக்க வேண்டியது. நல்லவேளை அவர்களது ஏராளம் நண்பர்களில் ஒருவர் கொஞ்சம் பெரிய மனது பண்ணி தனது வீட்டில் ஒளிக்க இடம் கொடுத்ததால் உயிர் தப்பினர்!

இராசசிங்கத்தின் அப்பா நாகலிங்கம் அந்தக் காலத்தில் கொஞ்ச ஆங்கிலம் கற்று சிங்கப்பூருக்குச் சென்று ஆங்கிலேயரின் கீழ் ஒருசின்ன உத்தியோகம்பார்த்தார் தாம் படித்த சொற்ப ஆங்கிலத்திற்கு அளவாகச் சொற்ப பணத்தையே அவரால் உழைக்கமுடிந்தது. இருந்தாலும் உத்தியோகம் உழைப்பு என்றபேச்சே இல்லாதிருந்த அந்தக்காலத்தில் ஊரவர்களுக்கு அது பெரிய உத்தியோகம் உழைப்பு!

நாகலிங்கம் திரும்பவும் யாழ்ப்பாணம் வந்து நிலம் வாங்கி வீடுகட்டினார். நாலு அறைகளும் ஒரு திண்ணையும் தலைவாசலும் கொண்ட ஒரு சாதாரண வீடுதான் என்றாலும் எல்லாம் ஓலைக்குடிசைகளும் மண் வீடுகளுமாக இருந்த அந்த ஊரில் அது மாளிகை போல உயர்ந்து நின்றது.

இராசசிங்கம் பிறந்தது வளர்ந்தது எல்லாம் அந்த வீட்டில்தான் உத்தியோகம் கிடைத்துக் கொழும்புக்கு வரும் வரை அதில்தான்வாழ்ந்தார். வேலையாகிக் கொழும்புக்கு வந்தபிறகு அவர் யாழ்ப்பாணம் போவது அப்படி அப்படித்தான். கல்யாணம் செய்யப்போய் வந்தார். தாய்தகப்பனது மரணத்துக்குப் போய் வந்தார் அவ்வளவுதான். பிறகு அவர் ஊர்ப்பக்கம் தலைகாட்டவேயில்லை. அந்த வீட்டில் யாரோ தூரத்து உறவினரை வாடகைக்கு இருத்திவிட்டு வந்துவிட்டார்.

நீண்டகாலம் தொடர்ந்து கொழும்பிலிருந்து வாழ்ந்த பின்பு ஊருக்கு வந்து அந்த வீட்டைப் பார்த்தபொழுது அதுதான் முன்பிருந்த வீடுதான் என்பதை நம்புவது அவருக்கே கஷ்டமாக இருந்தது. சுண்ணாம்புக் கட்டிடச் சுவர்கள் உடைந்துபூச்சுக் கொட்டுண்டு நிலக்காரை உடைந்து கிடங்குகள் விழுந்து கதவுகள் கீறல்கள்விழுந்து அழுக்கேறி வீடுமுழுவதும் ஒட்டறையும் தூசியுமாகி... அவற்றைப் பார்க்க அவருக்கு அருவருப்பாக இருந்தது. வீட்டில் எத்தனையோ இல்லைகள் மின்சாரம் ஒழுங்கான கக்கூஸ் இல்லை. கிணற்றில்... மோட்டார் இப்படி எத்தனையோ! இதிலிருந்து எப்படி வாழப்போகிறேன் என்று யோசித்தார். இராசசிங்கம் அவரது மனைவி விஜயாவிற்குத்தான் அவரையும் விடச் சங்கடமாக இருந்தது. கொழும்பிலேயே பிறந்துவளர்ந்துவிட்ட அவரது மகன்களுக்கும் மகளுக்கும் அப்படி எண்ணிப் பார்ப்பதே பயங்கரமாகப்பட்டது.

கொழும்பில் சொந்த வீட்டிலிருந்து அடித்துத் துரத்தப்பட்டபின்பு வேறு என்ன வழி? வீட்டைக் கூட்டித் துடைத்துத் துப்பரவுசெய்துகொண்டு வாழத்தொடங்கினர்.

அவரது மகன்கள் ரவியும் பாலாவும் மகள் சுசீலாவும் கொழும்பில் பெரிய கல்லூரிகளில் படித்துக்கொண்டிருந்தவர்கள் வேண்டுமானால் அவர்களைக் கல்லூரி விடுதிகளில் சேர்த்து அங்கேயே படிக்க விட்டிருக்கலாம் ஆனால் அதற்கு இராசசிங்கத்தாருக்குத் துணிவு வரவில்லை. எண்பத்து மூன்று அனுபவம் அவருக்குப் போதுமென்னப் போதுமாய் இருந்தது தலை பிளந்து உடல் கருகி, கால்வேறு கைவேறாகி... வேண்டாம்! வேண்டாம்! அதிலும் பார்க்க அவர்கள் யாழ்ப்பாணத்திலே படிக்கட்டும் என்று கல்லூரியில் சேர்க்கப்பட்டார்!

கலகங்கள் சற்றுத் தணிந்த பிறகு திரும்பவும் கொழும்புக்குப்போனார். அங்கு சூழநிலை முற்றாக மாறியிருந்தது. அவர் திரும்பி வந்ததையிட்டு அவரது நண்பர்கள் யாரும் மகிழ்ந்ததாகத் தெரியவில்லை. அவர்களில் எவரது முகத்திலும் அவரைச் சந்தித்த பொழுது ஆர்வம் தெரியவில்லை. மாறாக 'நீர் ஏன் இங்கு வந்தீர்?' என்று கேட்பது போன்ற ஒரு சந்தேகப்பார்வை தெரிந்தது. பேசாமல் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றார். உடைந்துபோன வீட்டையும் வளவையும் விற்றார். அவரது நண்பர்களில் ஒருவரே அதை அரை விலைக்கு வாங்கினார். அந்தக் காசைக் கொண்டு வந்து இராசசிங்கம் பருத்தித்துறையில் ஒருபுது வீடுகட்டிக் குடியேறினார்.

அதிலும் நிம்மதியாக வாழ முடியவில்லை. ஆமிக்கெடுபிடி அதிகமாக இருந்தது. எந்த நாளும் காதைச் செவிடுபடுத்தும் குண்டு வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்களும்தான். கொழும்பில் நிம்மதியாக உல்லாசமாக வாழ்ந்தவர்களுக்கு இது சகிக்க முடியாததாக இருந்தது தொல்லை, அர்கண்டத்தை விடப் பயம் தான் அதிகமாக இருந்தது. திரும்பவும் கொழும்புக்கே ஓடி விடுவோமோ என்று கூடச் சில வேளைகளில் எண்ணுவார் இராசசிங்கம். ஆனால் 83 பயங்கர நினைவுகள் மனதில் இன்னும் பசுமையாக இருந்து

[8-ம் பக்கம் பார்க்க]

## மாலை!

மாலை வகைகள்
மலைபோல் உண்டு!
ஃ
காலை வளர்ந்து
நண்பகல் முதிர்ந்ததின்
பின்னால் வருவது
மயக்கும் மாலை!
ஃ
வாழ்வைத் தொடங்கும்
மணமக்கள் கழுத்தில்
வாழ்த்துப் பெறுகின்ற
நல்லவர் கழுத்தில்—
கிடந்து புரளும்
மலர் மாலை!!
ஃ
செயற்கரிதான
செயல் செய்தவர்க்குப்
பரிசாகக் கிடைப்பது
புகழ் மாலை!!
ஃ
செய்யத் தகாததைச்
செய்தவருக்கு
வெறுப் டன் சூட்டுவர்
வசைமாலை!!
ஃ
பணம் படைத்தவன் தன்
படைபலம் காட்டிடக்
கழுத்தில் புரளும்
பொன்மாலை!

இறைவனைப் பணிந்து
அவனருள் இரந்து
சூட்டும் மாலை
பாமாலை!!
ஃ
இசைவாணர் கூடும்
அரங்குகளிலே
மலரும் மாலை
இசைமாலை!
ஃ
கலந்து வளர்ந்த
காதல் முரிந்து
கவலையில் மூழ்கும்
கன்னியின் கண்களில்—
தலைவனைப்பிரிந்த
தொண்டனின் கண்களில்
நண்பனை இழந்த
நண்பனின் கண்களில்—
வீழும் மாலையோ
கண்ணீர்மாலை!!
ஃ
தேர்தலில் நிற்கும்
வேட்பாளருக்கு—
நாளைய நன்மையை
நினைவில் கொண்டு
சூட்டும் மாலை
பணமாலை!

—முருகு

# புதிய சஞ்சிகை

நூல்: இந்துநாகரிகம்
ஆசிரியர்:
க.சி . குலரத்தினம்
விலை: ஐந்து ரூபா

நுட்பமான விடயயங்களைத் தெளிவாகவும் சுவையாகவும் வழங்குவதில் தலைசிறந்தவராகவும் அருமையான -தொடர்பான- பயன்படத் தக்க விடயங்களை தொகுத்து நூல் எழுதுவதில் சிறப்பாற்றல் பெற்றவராகவும் விளங்குபவர் திரு. க. சி குலரத்தினம் என்பது பகிரங்க உண்மையாகும்.

இவரால் எழுதப்பெற்ற 'இந்துநாகரிகம்' இதழ்வடிவில் வெளிவர ஆரம்பித்திருக்கிறது.


க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு உபயோகமான முறையில மூன்று பாகமாக இந்துநாகரிகம்பற்றி எழுதி மாணவர் மத்தியில் அறிமுகமாயிருக்கின்ற க.சி.கு. எழுதும் இவ்விதழ் க. பொ. த. உயர்தர மாணவர் உபயோகத்திற்குச் சிறப்பான சஞ்சிகையாகவும் சைவ மக்கள் அனைவருக்கும் பொதுவாகப் பயன்படும் கண்ணியம் உடையதாகவும் விளங்குகின்றது

சைவமரபையும் இந்துப் பண்பாட்டையும் தழுவிய முறையில் விநாயக வணக்கம் அக்கினி வணக்கம், சூரிய வணக்கம், வாயுதேவன்வணக்கம் என்பனவற்றை உள்ளடக்கியதாகக் கடவுள் வணக்கம் கட்டுரை அமைந்திருக்கின்றது. 'மூத்த கணபதிக்குத் தோத்திரங்கள் சொல்லி முடியோடு தேங்காயைப் படியில் அடித்து' என்னும் நாட்டுப் புறவணக்கத்துக்கு இடம் கொடுத்திருக்கின்ற இக்கட்டுரையில் ஈசாவாஸ்ய உபநிடத சுலோகத்தின் அக்கினி வழிபாட்டு மொழிபெயர்ப்பும் இடம்பெற்றிருக்கின்றது.

செகதீஸ்சந்திரவசு என்னும் விஞ்ஞானப்பெரியாரால் நிழ்த்தப்பெற்றதும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரால் மொழிபெயர்க்கப்பட்டு'ஞான நானு' என்னும் பத்திரிகையில் வெளிவந்த பகுதி இந்து நாகரிகத்தின் தன்மையை தெளிவுபடுத்துகின்றது.

''இந்துநாகரிகத்துக்குள்ளேயே ஒரு விஷேச சக்தி இருக்கிறது....

எகிப்து தேசத்திலேயும் அசிரிய தேசத்திலேயும் பபிலோனிய தேசத்திலேயும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பெரிய பெரிய அறிவுப் பயிற்சிகள் தோன்றி வளர்ந்ததையும் மாறியதையும் மறைந்ததையும் நமது மகத்தானஇந்து நாகரிகம் பார்த்துக்கொண்டிருந்தது. அப்போது கூடநமது நாகரிகம் அளவிடமுடியாத



பழமை கொண்டதாக விளங்கிற்று..'' இப்பகுதியும் இது போன்ற பல குறிப்புகளுக்கும் மாணவர்க்கும் பொது மக்களுக்கும் ஒருங்கநன்மைசெய்யும் தன்மையவாய் இவ்விதழில் இடம்பிடித்துள்ளன.

கோபுரதரிசனம் துவாரபாலகர்கள், இந்திய மெய்ப்பொருளியல், பண்டைய பாரதப் புதைபொருள், நந்தியெம்பெருமான், இந்து மதத்தில் பயின்றுவரும் தொகையகராதி, சிவாகமங்களின் வழிவந்த பத்ததிகள். சைவத்திற் பெண்கள், அகோர சிவாசாரியார், திரிசூலம், சிகை தீட்டை, திருஞான சம்பந்தர் தேவாரத்தில் சைவசித்தாந்தம் முதலியனவாக உள்ளதலைப்புக்களில் இடம்பெற்றிருக்கும் விளக்கங்கள் இதழின் தகுதியையும் பயன்பாட்டையும் உறுதிப் படுத்துகின்றன.

மேற்குத்தேச தரிசனங்கள் என்றகுறிப்பில் நம்மத்தியில் விளங்கும் நியாயம் வைசேடியம், சாங்கியம், யோகம், மீமாம்சை ஆகிய தரிசனங்களுடன் மேலைத்தேயக்கொள்கைகள் ஒத்துபோவதை வில்லியம்யோன்ஸ் என்னும் பெரியார் ஒப்பிட்டுக் கூறியிருப்பது எடுத்துக்காட்டப்படுகின்றது. வில்லியம் யோன்ஸ் வழியில் கௌதமர், ஜைமினி, வாதராயனர், சபிலர் பதஞ்சலி ஆகியவர்களின் கோட்பாடுகளை ஒத்த கோட்பாடு உடையவர்களை எடுத்துக் காட்டிச் சிந்திக்கும்படி தூண்டுவதும் அருமை!

அழகிய முன்னட்டையுடன் விளங்கும் இந்து நாகரிகம் இதழ் ஒன்றன் பின் ஒன்ருக விரைவாக வெளிவரும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது இதன் அபிமானிகள் ஆதரவாளர்களின் ஊக்கு வித்தலை வரவேற்கு செய்தியென மதிக்கும்படியாக உள்ளது. இந்த வரிசையில் எவ்வளவு தொகையான இதழ்கள் வெளிவந்தாலும் அவை எல்லாம் தரம் குன்ருத பெறுமதியுடனேயே விளங்கும் என்பதை இதன் பின்னணியும் இவ்வாசிரியரால் பன்னிருவடங்கள் தொடர்ந்து எழுதப்பட்டு வெளியாகும் மில்க்வைற்செய்யும் உறுதிப்படுத்துகின்றன. எனவே விரைவாகப் பல இதழ்களை வெளிவரச்செய்வது நம நாகரிக அபிமானிகளதும் இந்து நாகரிகத்தை ஒரு பாடமகப் பயிலும் மாணவர்களதும் கடமைபாகும்.

பண்டிதர்
சி. பொன்னம்பலவாணர்

## சிறுகதை

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

அந்த எண்ணத்தை விரட்டியடித்தன.

புதிய வீட்டில் சில மாதங்கள்தான் வாசம். விரைவில் அது ராணுவ முகாம் விஸ்தரிப்பதறகாக எடுக்கப்பட்டது. பழைய குருடி கதவைத் திறவடி என்று மீண்டும் பழைய வீட்டுக்குச் சென்று குடியேறினர். அங்கும் பல நாட்கள் வாழ முடியவில்லை. திடீரென்று ஒருநாள் ராணுவத்தாக்குதல் ஆரம்பித்தது. முழுக்குடும்பமும் மூன்று நாட்கள் வெயில் காற்றுக் கூடப்பிடிக்காமல் பங்கருக்குள் பதுங்கிக்கிடந்து சாப்பாடு கூட இல்லாமல் கோவிலில் பட்டினி கிடந்து ஒருநாள் இரவு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பற்றைகளுக்கூடாகப் பதுங்கிப் பதுங்கி நடந்து கொடிகாமத்தைச் சென்றடைந்தது. அங்கு யாரோ ஒரு புண்ணியவாளன் வீட்டில் ஒருநாள் தங்கியிருந்து உணவருந்தி அவரிடம் கொஞ்சக் காசு பெற்று பஸ்ஏறி யாழ்ப்பாண நகரில் உள்ள தமது நண்பர் ஒருவரதுவீட்டைக் குடும்பத்துடன்சென்றடைந்தார்இராசசிங்கம்.

யாழ்நகரிலும் ஒரே பீதி, பதட்டம் எதுவும் எப்பொழுதும் நடக்கலாம் என்று மக்கள் ஏங்கிக் கிடக்கின்றனர். செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

இந்த நேரத்தில்தான் அச்சுவேலிக்கு ஆமி வந்து விட்டது என்ற செய்தி வதந்தியாகி பற்பல உருவங்கள் எடுத்து யாழ்நகரை வந்தடைந்தது.

மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடத் தொடங்குகின்றனர். கொழும்புக்கும், வவுனியாவுக்கு, கிளிநொச்சிக்கு, மன்னருக்கு, முல்லைத்தீவிற்கு தெற்கில் இருந்து பாதுகாப்புத்தேடி யாழ்ப்பாணம் வந்தவர்கள் எல்லாம் இப்பொழுது தெற்கு நோக்கி ஓடுகின்றனர் சிலர் வள்ளங்களில் ஏறிவடக்கு நோக்கி இந்தியாவுககும் ஓடுகினறனா. சிலர் யாழ். குடாநாட்டிற்குள்ளேயே பாதுகாப்பான இடங்களை நாடி ஓடுகின்றனர்.

பஸ்தரிப்பு நிலையங்களில் மக்கள் பெட்டி படுக்கைகளுடன் தவங்கிடக்கின்றனர். கடற்கரையோரங்களில் வள்ளங்களுக்காகவும் காத்துக் கிடக்கின்றனர். நாட்சணக்காகப் போகும் பஸ்களும்வள்ளங்களும் மக்களால் நிரம்பி வழிகின்றன.

இராசசிங்கத்தாருக்கும் பயமாகத்தான் இருக்கின்றது. தமது வயது வந்த பிள்ளைகளை நினைத்துப் பார்க்கப் பயம் இரட்டிப்பாகிறது. பயம் ஒன்றும் அவருக்குப் புதிதில்லை! எத்தனைமுறை அதில் மூழ்கி இருக்கிருர்! எத்தனை முறை மரணத்தை நேருக்குநேர் சந்தித்த பின்பும் ஓடி உயிர் தப்பியிருக்கிருர்! இப்பொழுது கையில் ஒரு சதமும் இல்லாத நிலையில் அவர் எங்கே போவது? போனலும் போய்ச் சேர்ந்த இடத்தில் பாதுகாப்பாக இருக்கமுடியும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஏதோ நடக்க வேண்டியது தான் நடக்கிறது. கடவுள் இருக்கிருர். எல்லாம் நன்மைக்கே என்று கடவுள்மீது பாரத்தைப் போட்டு விட்டு நிம்மதியாக இருக்கிருர்.

(யாவும் கற்பனை)

## ஓர் இனிய பயணம்....

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

னைய விசுவநாதர் ஆலயத்தை உடைத்து அந்த இடததில் இந்த மசூதியைக் கட்டுவித்தானும். விசுவநாதர் கோவிலுக்கும் மசூதிக்குமிடையில் 'ஞானவாவி' என்றழைக்கப்படும் கிணறு ஒன்று இருக்கிறது. இக்கிணறு ஒரு முனிவரால் உண்டாக்கப்பட்டதாம். ஆலயத்தை உடைத்தபொழுது விசுவநாதரை இக் கிணற்றில் போட்டு மறைத்து வைத்தாக கூறுவர். ஞானவாவிக்கு மேற்கில் 'முத்தி மண்டபம்' என்றழைக்கப் படும் மண்டபம் அமைந்துள்ளது. இம் மண்டபத்தில் அமர்ந்து திருவைந்தெழுத்தை ஜபித்தால் எண்ணில்லாத பலன்கள் உண்டாகும் என்பர். விசுவநாதர் ஆலய தரிசனத்தை முடித்தபின்னர் அருகே அமைந்தள்ள அன்னபூரணி ஆலயம் சென்று வணங்கினேம். இடையில் உள்ள அட்சயவடம் [ஆலமரம்] துண்டிராஜ விநாயகர், சாட்சி விநாயகர் முதலியவற்றையும் தரிசித்தோம் பின்னர் சிறிது தூரத்தில் அமைந்துள்ள விசாலாட்சி ஆலயம் சென்றோம், சிறிய கோவில். தென் இந்திய சிற்ப வடிவில் அமைந்துள்ளது. நாட்டுக் கோட்டை செட்டிமாரால் கட்டப்பட்டது. பூசை வழிபாட்டுமுறைகளும் தமிழக முறையிலேயே நடைபெறுகின்றன. விசாலாட்சி அம்மனைத் தரிசித்து வணங்கிய பின்னர் பகல் 1-00 மணியளவில் சத்திரத்துக்குத் திரும்பினேம்.

மீண்டும் மாலை 7-00 மணிக்கு விசுவநாதர் ஆலயத்தில் சப்தரிஷி பூசை தரிசனத்திற்காகச் சென்றோம். கட்டணம் செலுத்தி அநுமதிச் சீட்டுப் பெற்ருல் கருவறைப்படிகளிலிருந்து இப்பூசையைத் தரிசிக்க அனுமதிக்கிருர்கள். இப்பூசை இரவு 7.30 மணி தொடககம் 8-30 மணி வரை நடைபெறுகிறது. ஏழு அந்தணர்கள் விசுவநாதருக்கு சுற்றிவர அமர்ந்திருந்து நெய், தேன், பால்,வாசனைத் திரவியம், கங்கைநீர் முதலியவற்ருல் மிகபயபக்திடாக அபிஷேகம் செய்கிருர்கள். பின்னர் பூமாலைகளினுல் அலங்காரம் செய்து வெள்ளியினுல் செய்யப்பட்ட ஐந்து தலை நாகம் சார்த்தி தூபதீபம் காட்டி, வேதகீதங்களைப்பாடி ஆராதனை செய்கிருர்கள். அப்பொழுது உடுக்கு, மணிஇவைகள் இசைக்கப்படுகின்றன.இக் காட்சி எம்மை மெய்மறக்கச் செய்கிறது. இந்தத் தரிசனத்தை முடித்துக்கொண்டு மனநிறைவுடன் சத்திரம்திரும்பினேம்.

அடுத்தநாள் 3-5-86 காலை கேதாரகட்டம் என்றழைக்கப் படும் படித்துறை சென்று நீராடி அருகில் உள்ள கேதாரநாதர் ஆலயம் சென்று வழிபட்டோம். இவ்வாலயம் திருப்பனந்தாள் மடத்தலைவரால் கட்டப்பட்டது. இக்கோவில் தமிழ்நாட்டு சிற்ப அமைப்பில் அமைந்துள்ளது. கோவிலுக்கு அருகாமையில் திருப்பனந்தாள் மடம் இருக்கிறது, 'காசிமடம்' 'குமாரசாமி மடம்' என்றும் இம்மடத்தை அழைப்பார்கள். தமிழ்நாட்டவர்கள் சென்று தங்க இதுவும் வசதியான மடமாகும்.

அன்று இரவு விசுவநாதர் ஆலயத்தில் அர்த்தஜாமபூசை தரிசனத்திற்காகச் சென்றோம். இப்பூஜை நாம் தங்கியுள்ள நகரத்தார் சத்திரத்தாரால் செய்யப்படுகிறது. பூசைக்குரிய அபிஷேகத் திரவியம், புஷ்பம் முதலியவற்றை சத்திரத்திலிருந்து தவில்நாதஸ்வர இசையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்கிருர்கள்.கோவில் பிராமணர் விசுவநாதருக்கு அபிஷேகம் செய்து பூமாலைகளினுல் அலங்காரம் செய்கிருர்கள். வெள்ளியினுல் செய்யப்பட்ட பெரிய வடிவிலான ஐந்து தலைநாகம் சார்த்தி [சப்தரிஷி பூசைக்குச் சார்த்தும் நாகம்அல்ல) நைய்வேத்தியம் வைத்து தூப தீபம் பஞ்சாலாத்தி காட்டி ஆராதனை செய்கிருர்கள், தவில் நாதஸ்வரம் வாசிக்கப்படுகிறது. சத்திரத்திலிருந்து செல்பவர்களை இப்பூசையைக் கர்ப்பக்கிருக படிகளிலிருந்து தரிசிக்க அனுமதிக்கிருர்கள். இப்பூஜைஇரவு 9-30மணிதொடக்கம் 10-30 மணிவரை நடைபெறுகிறது, பூசைமுடிந்ததும் பக்தர்களுக்கு பிரசாதம் [சர்க்கரை அன்னம்] வழங்குகிருர்கள். அதிகாலை 4-00 மணிக்கு நடைபெறும் திருவனந்தற் பூசையும் நகரத்தார் உபயமாகவே நடைபெறுகிறது.

பூசை தரிசனத்தை முடித்துக்கொண்டு சத்திரம் சென்று இரவு 11-30 மணியளவில் காயாவுக்கு செல்வதற்காக வாரணசி புகையிரத நிலையம் சென்றோம்.

## கவிமலர்

### செவிநுகர் கனிகள் தாரீர்

கனிகளிற் சிறந்த மேலாம்
கலம்பகப் பிழிவைச் சேர்த்தே
செவிநுகர் கனிகள் என்னும்
சிறந்த நற்கவிகள் கொண்டே
புவியிளோர் போற்றும் மேலாம்
பொற்புறு கனிகள் போன்றே
கவிதைகள் புனையவல்லீர்
காரிய உறுதிகொள்வீர்

கண்ணினு மினிய எங்கள்
கவிஞர சொஞ்சம் கேளீர்
விண்ணினு மேலாம் உங்கள்
வியத்தகு புலமை தன்னை
பண்ணிசை சேர்த்தே நல்ல
பாடகர் படிக்கும் போழ்து
ண்ணிய நெஞ்சம் கூட
திணறியே உருகிப் பாயும்

செந்தமிழ் மொழியைக் கற்று
செய்கின்ற கவிஞன் ஊற்று
நந்தமிழ் மக்கள் காதில்
நயம்படப் பாயும் போழ்தில்
பைந்தமிழ் ஓசை எங்கும்
பாய்ந்துமே பண்பு சேர்க்கும்
அந்தமிழ்ப் புலவீர் உங்கள்
அருமையை அறிவார் யாரோ

முருகவே பரமநாதன்

## தொடர் நவீனம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி

இப்போது இங்கு பொன்நில்லை போன்ற பலர்!

''இன்றைய மெய் வல்லுநர் போட்டியில் முதல் நிகழ்வாக நூறு மீற்றர் ஓட்டங்கள் இடம் பெற இருக்கின்றன. முதலில் பதின்மூன்று வயதின் கீழ் ஆண்களுக்கான நூறு மீற்றர் ஓட்டம்! இதில் பங்கு பற்றும் இலக்கங்கள்.. பதின்மூன்று ஏழு, இருபத்தாறு, நாற்பத்து மூன்று, ஐம்பத்தாறு, எழுபதெட்டு ஓட்ட வீரர்கள் உடனே ஆரம்ப ஸ்தானத்திற்கு அழைக்கப்படுகிருர்கள்.''

இவ்வாறு அறிவித்துவிட்டுத் தொடர்ந்து அறிவிக்குமாறு இவருக்குச் சைகைசெய்கிருர் அருகில் இருக்கும் ஆண் அறிவிப்பாளர் வரதன்.

(தொடரும்)

## சிரிப்பு

நகைச்சுவை உணர்வு இல்லாத மனிதன் 'ஸ்பிரிங்' இல்லாத வாகனம் போன்றவன். வாழ்க்கை எனும் பாதையில் கிடக்கும் சாதாரண சிறுகற்கள் கூட தூக்கித்தூக்கிப் போட்டு அசௌகரியத்தை ஏற்படுத்தும்

- ஹென்றி

# தந்தை செல்வாவும் தமிழறிஞர் சண்முகசுந்தரமும்

## மயிலங்கூடலூர் பி. நடராசன்



ஈழத்துத் தமிழர் அரசியல் பண்பாட்டு வளர்ச்சியில் தந்தை செல்வநாயகத்திற்குச் சிறப்பான பங்குண்டு அரசியல் வளர்ச்சியில் அவரது பங்களிப்புப்பற்றி நிறையப் பேசப் பட்டுள்ளது. ஆனுல் பண்பாட்டு வளர்ச்சிக்கு அவர் ஆற்றியசேவை பொதுவாகப் பேசப்படுவதில்லை. தமிழரின் மரபுவழித் தாயகத்தில் தமிழரசு ஒன்றை உருவகப்படுத்துவதே தந்தை செல்வா நிறுவிய தமிழரசுக் கட்சியின் நோக்கமாக இருந்தது. தங்களுள் ஒன்ருக பண்பாட்டு மறுமலர்ச்சியும் தமிழரசுக் கட்சியின் நோக்கமாக இருந்தது. பண்பாட்டு மறுமலர்ச்சியும் தமிழரசுக் கட்சியின் நோக்கங்களுள் ஒன்ருக இருந்தது தமிழ்பேசும் மக்களின உரிமைக் குரலாகத் தந்தை செல்வநாயகம் வெளியிட்ட சுதந்திரன் இதழ் கலை, இலக்கிய மறுமலர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியது. பேராசிரியர் கைலாசபதி இதனைப்பற்றி கூற முயன்ருலும் அவரது அரசியல், இலக்கியக் கோட்பாட்டுச் சார்புகள் அதற்குத் தடையாக அமைந்தன. (முற்போக்கு இலக்கியம் எழுத்தாளர் மாநாட்டு மலர் 1962 ) சுதந்திரனின் கலை இலக்கிய சாதனைகள் அதில் கடமையாற்றிய ஆசிரியர் குழுவின் வெற்றிகளாகவே கொள்ளப்படுவதுண்டு. அதன்வெளியீட்டாளராகிய தந்தைசெல்வாவின் கலை இலக்கியக் கோட்பாடுகளோ அத்துறையில் அவரது பங்களிப்போ கருத்திற் கொள்ளப்படுவதில்லை போதிய சான்றுகளின்மை அதற்கு ஒரு காரணமாகலாம்.

தமிழறிஞர் த. சண்முகசுந்தரம் அவர்களுக்கு 19-1-1953 முதல் 18-10-1972 வரை மூதறிஞர் தந்தை செல்வநாயகம் எழுதிய கடிதங்கள் தந்தை செல்வாவின் கலை இலக்கியம் சார்ந்த கருத்துக்களையும் அவற்றின வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்பையும் அறியத்துணை புரிகின்றன.

தந்தை செல்வாவின் இருபத்தைந்து கடிதங்களை பல்துறை ஆற்றல் மிக்க எழுத்தாளரான த. சண்முகசுந்தரம் பாதுகாத்து ஒட்டுப் புத்தகமாக ஆக்கிவைத்துள்ளார்கள். இவற்றுள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 1972ல் நடத்திய பாவலர் துரையப்பா பிள்ளை நூற்ருண்டு விழா தொடர்பான இரண்டு தமிழ் கடிதங்களை தவிர்ந்த ஏனைய எல்லாம் ஆங்கிலத்திலேயே அமைந்துள்ளன.

தமிழறிஞர் மா. த. சண்முகசுந்தரம் அவர்கள் கால் நூற்ருண்டுக்குமேலாக தந்தை செல்வாவுடன் நேரடித்தொடர்புகொண்டிருந்தார். தமிழரசுக் கட்சியின் அரசியற்கொள்கைகளை அவர் கற்றுக்கொண்டிருந்தார். இதனல் சுதந்திரனுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு மிகநெருக்கமாக அமைந்தது. சுதந்திரனில் அவரது சிறுகதைகள், நாவல்கள், சமூக சீர்திருத்தக்கட்டுரைகள் அரசியல் இலக்கிய விமர்சனக்கட்டுரைகள், செவ்விகள் முதலியன தொடர்ந்து வெளிவந்தன. இவை தொடர்பாகவே சுதந்திரன் வெளியீட்டாளர் பதிப்பாசிரியர் என்ற வகையில் தந்தைசெல்வா தமிழறிஞர் சண்முகசுந்தரத்திற்கு கடிதங்களை எழுதினர்.

பொறுப்பு வாய்ந்த அரசியல் தலைவராகவும் புகழ்பூத்த வழக்கறிஞராகவும் பாராளுமன்றஉறுப்பினராகவும் விளங்கிய தந்தை செல்வா காலதாமதமின்றியும் தவருமலும் கடிதம் எழுதியமை வியப்பூட்டுவதாக உள்ளது. சுருக்கெழுத்தாளர் விடுமுறையில் நிற்றல் அல்லது தமது உடல்நலமின்மை காரணமாகக் கடிதம் எழுதத் தாமதமாகும் போதெல்லாம் அவர் மன்னிப்புக் கோருவது அவரது மாண்பை வெளிப்படுத்துகிறது.

படி தந்தை செல்வா த. சண்முகசுந்தரம் அவர்களுக்கு 18-1-1953 இல் கடிதம் எழுதினர். நடிதத்தின் முக்கிய பகுதிகள்:

''இந்திய வம்சாவழி மக்களை இலங்கையிலிருந்து வில்லங்கமாக வெளியேற்றும் இலங்கை அரசின்கொள்கை தொடர்பாக இந்திய தூதுவர் சாரி அவர்கள் வெளியிட்ட அறிக்கையை 'டெய்லி நியூஸ்' பத்திரிகையின் அரசியல் விமர்சகர் கண்டித்துள்ளார் உங்களுக்கு வாய்ப்பிருந்தால் இது தொடர்பாக சுதந்திரன் இதழில் வெளியிட ஓர் ஆய்வுக்கட்டுரை அல்லது ஆசிரியத் தலையங்கம் எழுதிஅனுப்புங்கள்அம்மக்கள் இந்தியர்கள் என்பதால் பல்

மலையகத் தமிழர் சிக்கலே தந்தை செல்வா தமிழர் பேராயக்கட்சியிலிருந்து காங்கிரஸ்] விலகித் தமிழரசுக் கட்சியை நிறுவக் காரணமாக அமைந்தது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே மலையகத் தமிழர் பிரச்னை தீர்க்கமுடியாத சிக்கலாக அமைந்துவருகின்றது. இதுதொடர்பாக இலங்கைக்கான பாரதத்தூதர் மேதகுசாரி அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். தூதுவர் ஒருவர் அரசியலில் ஈடுபடலாமா என்றகேள்வி பெ தாக எழுந்தது. இதுபற்றிய ஆய்வுக்கட்டுரை ஒன்றை அல்லது ஆசிரியத் தலையங்கத்தை [a considered Article or an Editorial] எழுதி அனுப்பும் வேறுவகைகளில் துன்புறுத்தப் படுகிருர்கள் இந்திய அரசோ இந்திய மக்களோ இவற்றை ஆட்சேபித்தால் இலங்கை கோபப்படுகிறது. இந்த மனப் போக்கையே 'டெய்லி நியூஸ்' கட்டுரை எதிரொலிக்கிறது.

சாரி அவர்கள் செயல் தூதுவர் உரிமையையும் நடத்தையையும் மீறவில்லை என்பதையும் இந்தியத் தமிழர் எனப் படுவோர் தொடர்பான சிக்கல் முற்று முழுதாக இலங்கையின் உள்நாட்டுப் பிரச்னை அல்ல என்பதையும் நீங்கள் சுட்டிக் காட்டலாம் சாரி அவர்களின் செயல் தவருனல் கிழக்கு வங்கத்திலுள்ள சிறுபான்மையினர் சிக்கலில் நேருஅவர்கள் ஆர்வம் காட்டக்கூடாது, ஆபிரிகக நீக்கிரோவர் சிக்கல் தொடர்பாக உலகம் அக்கறை சாட்டக் கூடாது என்று ஆகுமல்லவா?

நீங்கள் எழுதுவதாயிருந்தால் உங்கள் எழுத்துப் பிரதி செவ்வாய் அல்லது புதன்கிழமைக்கு முன் எனக்குக் கிடைக்க வேண்டும்.''

இக்கடிதத்தில் சண்முகசுந்தரம் அவர்கள் மீது தந்தை செல்வா கொண்டிருந்த நம்பிக்கையும் உரிமை உணர்வும் புலப்படுகின்றது

சண்முகசுந்தரம் அவர்கள் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்க வெளியீடான 'இளங்கதிர்' இதழின் நிறுவக ஆசிரியர். அவர் தினகரன் ஏட்டின் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றுப் பத்திரிகைத்துறை அநுபவம் பெற்றவர். உலக அரசியலில் மிகுந்த ஆர்வம் உடையவர்



எல்லாவற்றுக்கும் மேலாக தந்தை செல்வாவின் அரசியல் நிலைப்பாட்டை முழுமையாக ஏற்றுக் கொண்டவர். இவை அனைத்தையும் அறிந்திருந்ததாலேயே தந்தை செல்வா சண்முகசுந்தரம் அவர்களிடம் இத்தகையநம்பிக்கைக்குரியபொறுப்பைஒப்படைத்தார்.

'கூட்டாட்சி அரசு' தொடர்பாக நூல் ஒன்று வெளிவர வேண்டும் என்பது தந்தை செல்வாவின் விருப்பம். அதனை நிறைவேற்றும் பொறுப்பை அவர் சண்முகசுந்தரம் அவர்களிடம் ஒப்படைத்தார். தமது நேரடி மேற்பார்வையிலும் ஆலோசனையிலும் அது வெளிவரவேண்டும் என்பதுஅவரது விருப்பம். இது தொடர்பாக பல கடிதத்தொடர்புகள் இருவருக்கிடையேயும் நடந்தன. பல முன்னேடிக் கட்டுரைச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டன. தந்தை செல்வா அவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து வேண்டிய திருத்தங்களை எடுத்துரைத்தார். நூல் எழுதும் பணி தொடங்கியது தொடர்ந்தது ஆனுல் நூல் வெளியானதாகத் தெரியவில்லை. ஆனுல் இவ்விடயம் தொடர்பான கடிதங்களில் தந்தை செல்வாவின் அரிய நெறிப்படுத்தற் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. அவை செல்வா பற்றிய ஆளுமை ஆய்வுக்குப் பயனுள்ளவை. 'நூல் யாருக்கு?' என்ற விஞவை எழுப்பிச் செல்வா பின்வருமாறு எழுதுகிருர்:

பொருளடக்கத்தின் ஒழுங்கமைப்பு நாம் யாருக்காக நூலை எழுதுகிரேம் என்பதைப் பொறுத்தது கற்றுவல்லவர்களுக்காயின் நூல் அறிவு நிலையில் நின்று எழுதப்பட வேண்டும். பொருள் பற்றிய நடைமுறை அறிவை நாடும்

(10-ம் பக்கம் பார்க்க)

● ஓர் அரிய
பெரிய சந்தர்ப்பம்
மீண்டும் வழமைபோல்
வெளிநாடு செல்லமுடியும்.

★ ஜேர்மனி
★ பிரான்ஸ்
★ பெல்ஜியம்
★ நோர்வே
★ கனடா

AUCTIONERS & BROKERS

உடனடியாக தாமதமின்றித் தொடர்புகொள்க.
ஏனைய வசதிகளும், ஒழுங்குகளும் செய்யப்படும்.
எங்கள் ஏனைய சேவைகள்:-
★ எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்.
★ துரிதமான பாஸ்போட், விசா, பொன்ட் ஒழுங்குகள்.
★ CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION.
★ இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்.

MACK COMMUNICATIONS AND TRAVELS,
இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
TELE:- 24791, 24836.
[சி-1933]

CITY & GUILDS OF LONDON INSTITUTE
Quantity Surveying-Part I & II
1988-ம் ஆண்டுப் பரீட்சைக்காக நடாத்தப்படும்
வகுப்புக்கள் 05-08-1987-ல் ஆரம்பமாகின்றன.
விபரங்களுக்கு: ATLAS INSTITUTE,
ஆடியபாதம் ரோட், திருநெல்வேலி. [சி-9854]

Brighton Academy
Manipay
பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்.
கலைமுதற்தேர்வு (G. A. Q.)
பரீட்சைக்கான விரிவுரைகள்
ஆரம்பமாக உள்ளது.
க. பொ. த. (உ/த) பரீட்சையில் மூன்று
பாடங்களில் சித்தியடைந்தவர்கள்
31-07-87-க்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.
விபரங்கட்கு:
பிறைற்றன் அக்கடமி,
(மருதடிப் பிள்ளையார் கோவிலடி),
மானிப்பாய். (சி 1923)

# தந்தை செல்வாவும் தமிழறிஞர் சண்முகசுந்தரமும்

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

பொது மக்களாயின் நூல் எளிமையாக அமைய வேண்டும். நாம் தமிழ் வாக்காளருக்காக எழுதுகிறோமா? அல்லது சிங்கள மக்களுக்காக எழுதுகிறோமா?

யாராவது ஒரு பகுதியினருக்கு மட்டும் எழுதுவது அறிவுடைமையாகாது. நல்ல அரசியல் விளைவைப் பெறவேண்டுமானால் எமது நூல் நான் மேலே குறிப்பிட்ட அனைவரையும் ஈர்க்கக்கூடியதாக அமைய வேண்டும்.

உங்களுடைய திட்டத்தை ஆராயும் போது நூல் அறிவு வகை நோக்கியதாகவே அமையும் என எண்ணுகிறேன். அது அரசியல் சார்பைவிட அறிவியற் சார்பையே அதிகம் கொண்டிருக்கும். அது சிறந்த மாணவர் நூலாகவே அமையும்.

கூட்டாட்சி பற்றிய கருத்துப் பெருந்தொகையான மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது என்பதில் ஐயமில்லை. தமிழரில் ஒருபகுதியினர் கூட்டாட்சிக் கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர் ஆனால் பொருந்தொகையினர் கூட்டாட்சிக் கொள்கை பற்றிய தெளிவான அறிவைப் பெருதோராகவே உள்ளனர். பின்னர் குறிப்பிட்டோரில்பலருக்கு கூட்டாட்சி பற்றிய பல பயங்கள் உள்ளன சிங்கள மக்களைப் பொறுத்த வரையில் பெரும்பான்மையோர் கூட்டாட்சி முறையை எதிர்க்கின்றனர். அறியாமையாலும்ஆராயாமையால் எழும் அச்சத்தினாலுமே அவர்கள் எதிர்க்கிறார்கள். எமது நூல் அவர்களது அச்சத்தையும் அறியாமையையும் போக்க வேண்டும்.

ஆகவே நானும் நீங்களும் இணைந்து ஆலோசித்து நூலை உருவாக்குவோம். சில நுணுக்க விபரங்கள் தொடர்பாகப் பிறரையும் கலந்து உரையாடுவோம்...

இந்த நீண்ட கடிதம் 28 04-1955ல் தந்தை செல்வா எழுதியது முதலில் ஆங்கிலத்தில எழுத எண்ணினலும் தமிழில் வெளியிடுவது என முடிவு செய்யப்பட்டது. இதற்கிடையில் வேறு சில நூல்கள் வெளியாகிவிட்டதால் திட்டம் கைவிடப்பட்டிருக்கலாம்.


## வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

**Bata SHOW ROOM**

இல. 19 & 20, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

எங்கள் இளை ஸ்தாபனம் ஒன்று பின்வரும் விலாசத்தில் திறக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

**Bata SHOW ROOM**

இல. 3, செட்டித்தெரு ஒழுங்கை,
(கைலாசபிள்ளையார் கோவில் அருகாமை)
நல்லூர், யாழ்ப்பாணம்.

(நேரம் காலை 9-00 மணி முதல் இரவு 8:00 மணி வரை)
எங்கள் ஸ்தாபனத்திற்கு வேறு கிளைகள் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

ஏ 1934



## விற்பனைக்கு

| | |
|---|---|
| B. I. SHEETS | 18 GS. |
| B. I. SHEETS | 20 GS. |
| B I SHEETS | 22 GS. |
| ROUND PIPES | 5/8" |
| ROUND PIPES | 3/4" |
| SQUARE PIPES | 1" |

மற்றும் Wash Basins, மற்றும் தேக்கம் பலகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

பொதுமுகாமையாளர்,
யூனிபோ நிறுவனம்,
வேம்பன் வீதி, உரும்பராய்.

[சி-9902]



இலங்கை மின்சார சபை

## கேள்விப் பத்திரம் கோரல்

## உபயோகிக்கப்பட்ட வாகனங்களின் விற்பனை

கீழ்க்காணும் மோட்டார் வாகனங்கள் விற்பனைக்கு உள்ளன.

| | வாகன எண் | மாதிரி | நிறுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|---|---|
| 1. | 33 ஸ்ரீ 4989 | மொறிஸ் ஒஸ்ரின் லொறி | திருகோணமலை பிரதேச அலுவலகம் |
| 2. | சீவி 3401 | பெட்வோட் லொறி | ஹிங்குராக்கொட பணிமனை |
| 3. | 5 ஸ்ரீ 2180 | மிஸ்சுபிசி ஜீப் | சுன்னகம் பிரதேச களஞ்சியம் |
| 4. | 5 ஸ்ரீ 1319 | மிஸ்சுபிசி ஜீப் | சுன்னகம் பிரதேச களஞ்சியம் |
| 5. | 24 ஸ்ரீ 3663 | மொறிஸ் பிஎம்சி லொறி | சுன்னகம் பிரதேச களஞ்சியம் |
| 6. | 25 ஸ்ரீ 6730 | மிஸ்சுபிசி ஜீப் | சாவகச்சேரி பணிமனை |
| 7. | 24 ஸ்ரீ 7486 | பெட்வோட் லொறி | வடபகுதி முகாமையாளர் அலுவலகம், அனுராதபுரம். |

கேள்விகள் முத்திரை பொறித்த தபாலுறையில் அனுப்பப்படல் வேண்டும். அத்தபால் உறைகளின் இடதுபக்க மேல்மூலையில் "உபயோகிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான கேள்விகள்" எனக்குறிப்பிட்டு, பகுதி முகாமையாளர் (வடக்கு) இலங்கை மின்சாரசபை, மைத்திரிபால சேனநாயக்கா மாவத்தை, அனுராதபுரம். என்ற முகவரிக்கு 1987 ஆவணி 05ந் திகதி காலை 10-00மணிககோ அல்லது அதற்கு முன்னரோ சேரக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

அனைத்துக் கேள்விகளும் தலா ரூபா 500/- (ஐந்நூறு) வீதம் ஒவ்வொரு வாகனத்துக்கும் மீளளிக்கக்கூடிய பாதுகாப்பு வைப்புப்பணமாக, பொதுமுகாமையாளர், இலங்கை மின்சாரசபை, கொழும்பு என்ற பெயரில் பெறப்பட்ட வங்கியாணையுடன், அல்லது காசுக்கட்டளையுடன் அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு கேள்விப்பத்திரங்களும் பெறும்போது, மீளளிக்கப்படாத ரூபா 25/- (இருபத்தைந்து) இற்கான காசுக்கட்டளையோ, வங்கியாணையோ இலங்கை மின்சாரசபைப் பொதுமுகாமையாளரின் பெயரில் பெற்று வழங்கப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரப் படிவங்கள் மின்னேரியா, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாண இலங்கை மின்சாரசபைப் பிரதேச அலுவலகங்களிலும், அநுராதபுர வடபகுதி முகாமையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம். குறித்த வாகனங்களை முன் அட்டவணையில் குறித்த இடங்களில் அலுவலக நாட்களில் காலை 8-00ற்கும் மாலை 16-00க்கும் இடையில் பரிசீலனை செய்துகொள்ளலாம்.

தெரிவுசெய்யப்படும் கேள்விப்பத்திரதாரர்கள் காசாக முழுக்கொடுப்பனவையும் செய்து, கேள்வியை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து ஒருவாரத்தற்குள் வாகனங்களைக் கொண்டுசெல்லல் வேண்டும்.

கேள்விகள் மேற்குறித்த அலுவலக கேள்விப்பத்திரங்களில் மட்டுமே அமைதல் வேண்டும்.

பகுதி முகாமையாளர் (வடக்கு),

இலங்கை மின்சார சபை.
மைத்திரிபால சேனநாயக்கா மாவத்தை,
அநுராதபுரம். 1987-07-16.

[ஏ-1934]



## குகன் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம் 180, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவந்த குகன் ஸ்ரோர்ஸ்
வாடிக்கையாளர்களின் நலன்கருதி பாதுகாப்பான
புதிய இடத்திற்கு
10-07-1987 முதல்
மாற்றப்பட்டுள்ளது.

புதிய முகவரி:-

## குகன் ஸ்ரோர்ஸ்

18, மின்சார நிலைய வீதி,
யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை நிலையம் செயற்பட்ட கட்டடம்,
(பெரியாஸ்பத்திரிக்குப் பின்புறம்)
யாழ்ப்பாணம்.

[ஏ-1924]





"உன்னைத் திருத்திக்கொள் சமூகம் தானகவே திருந்திவிடும்"
— சுவாமி சிவானந்தர்.

சிக்கன சலவைக்கு நுரைவளம் கூடிய
**மில்க்வைற் பார் சோப்பை**
வாங்கி உபயோகியுங்கள்.

பெரிய பார் சோப் புதிய விலை: ரூ. 14-00
சிறிய பார் சோப் புதிய விலை ரூ. 7-00

2 மேலுறைகளை அனுப்பி
சுவாமி சிவானந்தரின் ஸ்ரிக்கர் அல்லது
சூரிய நமஸ்காரம் ஸ்ரிக்கர் அல்லது
சுவாமி சிவானந்தரின் சீரிய போதனை
என்ற நூலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

— மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

(ஏ-1936)

## விபுலானந்தர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவசியமென்பதை நீண்ட காலம் வாதாடிவந்தார்.

நன்றியுள்ள யாழ். மக்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் அடிகளார் ஞாபகார்த்தமாக ஒரு உபகார நிதி என்றோ நிறுவியிருக்க வேண்டும். இன்றாவது இக் கைங்கரியம் நிறைவேற இப்பகுதி மக்கள் ஆவனசெய்ய வேண்டும்.

## வடமராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியிலிருந்து அகதிகளாக வெளியேறி மீண்டும் வடமராட்சி செல்பவர்கள் இராணுவத்தால் விசாரணை செய்யப்பட்ட பின்பே இந்த அடையாள அட்டைகள் வழங்கப்படும். (ஓ)

## கம்பன்விழா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் க. சொக்கலிங்கம், வித்துவான் வசந்தா வைத்தியநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் கருத்துரை நிகழ்த்துவார்கள்.

மாலை நடைபெறும் நிகழ்ச்சிக்கு திரு. மஜக. செந்தில்நாதன் தலைமை வகிப்பார். (ஓ)

## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நஷனல் வீடியோ கசற் றெக்கோடர் NV -230 EM புதியமொடல் 1986 உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: 505 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சி-9931

### மணப்பந்தல்

யாழ். உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த செவ்வாய்க் குற்றமுள்ள மாதம் 13 ஆயிரம் ஊதியம் பெறும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: ABCDE விவாகப் பொருத்துநர், 91/16 இந்து மகளிர் வீதி, கந்தர்மடம். [சி-9924]

தற்சமயம் இங்கு வந்திருக்கும் அவுஸ்திரேலியாவில் ஓர் பிரபல கார்க் கம்பனியில் Assistant Mechanic ஆக கிழமைக்கு 280 டொலர் சம்பளத்தில் வேலைசெய்யும் 31 வயதுடையவருக்கு இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த மணப்பெண் உடன் தேவை. அங்கு வேலை செய்யக்கூடிய தகைமை உடையவராக இருத்தல் வேண்டும் சாதகம், கல்வித்தகைமை, சீதனம், புகைப்படம், குடும்ப விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். விபரங்கள் அந்தரங்கமாகப் பேணப்படுவதுடன் பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். விளம்பர இல: 9925, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். P. Kanapathippillai, 66, College Lane, Jaffna. [சி-9925]

### மணமகள் தேவை

இந்து வேளாள உயர் குலத்தைச் சேர்ந்த London பிரஜா உரிமை உள்ள 33 வயது B. Sc. Electronic Eng. [எலெக்ட்ரோனிக் என்ஜினியர்] இற்கு; I. C. M. A அல்லது டாக்டர் பட்டம் பெற்ற மணப்பெண் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். T. பூபாலசிங்கம், கோப்பாய் ரோட், உரும்பராய். [சி-9929]

## பொடிபுத்தா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கடந்த பின்னர் அலமங்கட ராணுவமுகாமில் வைத்து பஸ் நிறுத்தப்பட்டு ராணுவத்தினர் சோதனையிட்டனர். சிங்கள பத்திரிகைகளில் என் படத்தைபபார்த்துள்ள அவர்கள நான் முதியான்சே தென்னக்கோனின் மகனா என்று விசாரித்தார்கள். பின்னர் யாழ்ப்பாணம் போவதற்கு அனுமதிக்கமுடியாது என்றும் கூறினார்கள். எப்படியும் என் தகப்பனாரைப் பார்க்கவேண்டும். அனுமதியுங்கள் என்று கேட்டுக்கெண்டபின் மேலதிகாரிகளுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அனுமதி வழங்கினார்கள்.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் கோயிலுக்கருகாமையில் ஓர் இடத்தில் நான் இறங்கினேன். அதேசமயம் மோட்டார் சைக்கிளில் வந்த சில இளைஞர்கள் நான் எங்கேபோகிறேன் என்று கேட்டார்கள்.

நான்காரணத்தைச்சொன்ன பிறகு எல்ப் ரக வாகனம் ஒன்றில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள் இரண்டுமாடிக் கட்டிடம் ஒன்றுக்கு கொண்டு சென்று இரண்டாம்மாடியில் ஓர் அறையில் இருத்தினார்கள். பின்னர் வாக்கிடோக்கி மூலம் யாருடனோ கருத்துப்பரிமாறிக் கொண்டார்கள் அதன் பின் என்னிடம் ஓர் இளைஞர் வந்து "நான்தான் ரஹீம்" என்று தெரிவித்துக்கொண்டார். அவர் என்னுடம் சிங்களத்திலேயே பேசினார். தகப்பனரை ஏன் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினீர்கள் என்று அவர் கேட்டார். தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு தாங்கள் எதிர் என்றும் தெரிவித்தார். நாட்டில் எத்தனையோ தேர்தல் தொகுதிகள் இருக்கும் போது யாழ்ப்பாணத்தை அவர் ஏன் தேர்ந்தெடுத்தார் என்றும் கேட்டார்.

அன்று பகல் சாப்பாட்டு பார்சல் ஒன்றைத்தந்தார்கள் அதில் சோறு, மீன், முட்டை, பருப்பு முதலிவை இருந்தன. அதேசமயம் ஹெலிகொப்டர் ஒன்றின் சத்தம்கேட்டது. பயமில்லாமல் நிலத்தில்சரிந்து கொள்ளும்படி என்னிடம் கூறினார்கள் அந்த அறையில் குண்டுகளும், துப்பாக்கிகளும் நிறைந்து காணப்பட்டன.

அன்றுமாலையில் எனக்கு கிளாஸ்பால் தந்தார்கள்அவர்கள் தயாரிக்கும் பழரசமும் குடிக்க கொடுத்தார்கள்.

பின்னர் ஒரு வாகனத்தில் ஏற்றி ஒருவீட்டுக்குக்கொண்டு போனார்கள். அங்கே 'ரவி' என்பவருடன் நான் கதைத்தேன் அவர்கள் வசமுள்ள சிங்கள ஆயுதப்படையினர் 13 பேரும் சுகமாக இருப்பதாக அவர் என்னிடம் கூறினார்.

எனது தகப்பனாரைப்பார்க்க இடமளிக்கும்படி கேட்டுக்கொண்டேன். அவர் இப்போது வேறு ஓர் இடத்திலிருப்பதாகவும் இன்று அல்லது நாளை அவர் விடுவிக்கப்படலாம் என்றும் கவலைப்படாமல் போகும்படியும் கூறி அனுப்பினார்கள்

இவ்வாறு பொடிபுத்தாவின் மகன் கூறியுள்ளார்.

---

### 31-ம் நாள் நினைவஞ்சலி

நல்லதம்பி சிவயோகம்
(பூநகரி)

தோற்றம்: 12-08-1927
மறைவு: 21-06-1987

அன்பானஅம்மா நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் எமது உள்ளத்தில உமது சமாதி என்றும் வீற்றிருக்கும். 21-07-1987 செவ்வாய் அன்றுநடைபெறும் அந்தியேட்டிக்கிரியையில் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அழைக்கின்றோம.

உமது பிரிவால்வாடும்:
அன்புக் கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

பொன்னம்பலம் வீதி,
காரைநகர். [சி-9914]

---

### 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
சின்னத்தம்பி
ஆச்சிக்குட்டி
(காங்கேசன்துறை)

தோற்றம்: 01-10-1907
மறைவு: 20-06-1987

22-06-1987 ல் நடைபெற்ற அன்னாரின மரணச்சடங்கில கலந்துகொண்டவர்களுககும மற்றும்பல வழிகளிலும் உதவிய நண்பர்கள், உறவினர்கட்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ள இவ் வேளையில் தற்போதய நிலைமையில் பல உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அன்னாரின் மரணச்சடங்கு தகவல்அறிவிக்கமுடியாததை யிட்டு மனம் வருந்துகிறோம். அன்னாரின் வீட்டுக் கிருத்தியம் நாளை (20-07-87) திங்கட்கிழமை அன்னாரின் இருபாலை இல்லத்தில் நடைபெறும். இவ் வைபவத்தில் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:

சி. குமாரசாமி குடும்பத்தினர், சி. முத்துசாமி குடும்பத்தினர், தெ. பாலச்சந்திரன் குடும்பத்தினர், சி. சிவசுப்பிரமணியம் குடும்பத்தினர், சி. சிவஞானம் குடும்பத்தினர்.
கேணிக்குளத்தடி,
இருபாலை,
கோப்பாய் (சி-9899)

---

### 43-வது நாள் நினைவஞ்சலி



துரை லோகேந்திரன்
(வெள்ளை)
மயிலன்காடு

தாயின்மடியில்:
14-12-1966
தாயக மடியில்:
07-06-1987

சுதந்திரத்தை நோக்கி
தடம்பதித்த
இளவேங்கை
நீ—
விடுதலையின்—
விடிவெள்ளி தோன்றும்
உதயத்தில்—
அஸ்தமித்ததென்ன?
★
கல்லறையைத்
தகர்த்தெழு
சிறைகள் எப்போதுமே
கொடுமையானவை
அது—
கல்லறையானாலும்கூட...
★
சூரியனாய் எழ
சுதந்திரமா மூச்சுவிட
தாயகத்து மண்ணதனில்
நீ மீண்டும்—
பிறப்பெடுப்பாய்

ஏழாலைவாழ்
மக்கள்
[சி-9926]

---

## வடமராட்சி செய்திகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சோதனை செய்யப்பட்டபின் சிற்றூழியர்மூலம்வார்ட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்ட பொழுது அங்கு வந்த சி. ஐ. டி ஒருவர் காயமடைந்தவரையும் சிற்றூழியரையும் தாக்கினாராம் இதனை அவதானித்த பிரஞ்சு டாக்டர் இராணுவ சி. ஐ. டியை எச்சரிக்கைசெய்ததுடன் அங்குள்ள முகாம் பொறுப்பாளரிடம் புகாசெய்ததாகக் கூறப்படுகின்றது.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கை காரணமாக மந்திகை ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியர்கள் தமது கடமைக்கு திரும்புவதற்கு அச்சம் தெரிவித்துள்ளனர். (ஓ)

### பஞ்சலிங்கம் பார்த்தார்

கடந்த வாரம் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் நெடுந்தீவு உதவிஅரசாங்கஅதிபர் சந்திரசேகரத்தை யாழ். அரச அதிபர் மு. திரு. பஞ்சலிங்கம் உட்பட யாழ். செயலக உயர் அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை பார்வையிட்டனர்

### அடையாளம் காணாத சடலம்

வடமராட்சி பகுதியில் அண்மையில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலினால் இறந்த மூவரின் சடலங்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அடையாளம் காணப்படாத நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இச்சடலங்கள் அழுகிய நிலையிலிருப்பதால் துர்நாற்றம் வீசுவதாக ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

### இ. போ. ச. பஸ் சேவை

வடமராட்சி பகுதியில் கடந்த 12-ம் திகதி தொடக்கம் ஐந்து போக்குவரத்து சபை பஸ்கள் சேவையிலீடுபட்டு வருகின்றன இப்பஸ்கள் வல்லைவெளி, முள்ளி ஆகிய இரு பாதைகளுடாகவும்போக்குவரத்து சேவையிலீடுபட்டுள்ளன.

பருத்தித்துறையிலிருந்து காலை 6-30, 8-30, 10-00, நண்பகல் 12-00, பி ப 3-00, 4-00 ஆகிய நேரங்களில் யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6-15, 6-45, 9-00, 10-00, நண்பகல் 12-00, பி. ப. 3-00, 4-00 ஆகிய நேரங்களில் பருத்தித்துறைக்கும், பருத்தித்துறையிலிருந்து கொடிகாமத்திற்கு காலை 7-00, 8 00, 10 00, நண்பகல் 12-00, பி. ப 3-00, ஆகிய நேரங்களிலும், கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறைக்கு காலை 8-30, 9-30, 11-30, பி.ப. 3 00, 4-00 ஆகிய நேரங்களிலும் பஸ்கள் சேவையிலீடுபட்டுவருகின்றன.

### வயோதிபமாது மரணம்

பலாலி இராணுவ முகாமிற்கு அண்மையில் பொறிவெடியில் சிக்கி இடதுகால் சிதறிய நிலையில் இராணுவத்தினரால் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வயோதிப மாது ஒருவர் சிகிச்சையின்பின் இறந்துள்ளார்.

---


# VACANCY for MECHANICAL ENGINEER

## WALK IN INTERVIEW

We are looking for a Mechanical Engineer with Engineering Degree or equivalent for immediate engagement for our vast expanding Engineering Company.

Please call for an interview on 22nd July 1987 at 9-30 a. m. in our Company office with all your certificates and documents.

Promoters Engineering Company always look for quality.

We say it and our customers confirm this.

PROMOTERS ENGINEERING COMPANY LTD.
844, Point Pedro Road, Nallur, Jaffna.

(A 1909)

# மிதுவீடியோ மூவிசாரின்
## இன்றைய புதிய வெளியீடுகள்

(1) கமல், ராதிகா, கே. ஆர். விஜயா நடித்த
★ பேர் சொல்லும்பிள்ளை

(2) கார்த்திக், முரளி, ஜெயஸ்ரீ நடித்த
★ வண்ணக் கனவுகள்

(3) சங்கர், ரூபா நடித்த
★ ஆடுகள் நனைகின்றன

(4) கிருஷ்ணா நடித்த
★ தாயின் கட்டளை

(5) M. N. நம்பியார் நடித்த
★ தங்க மாமா

(வீடியோ படப்பிடிப்பில் இன்று முன்னணியில் திகழ்பவர்கள்)

# மிதுவீடியோ மூவிஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.

(எ- 1938)

# "யாழ்குடாநாட்டுமக்களுக்கு வழங்குவதுபோன்று ஏனையதமிழ் அகதிகளுக்கும் இந்திய நிவாரணம் வேண்டும்"

யாழ்ப்பாணம், ஞாயிறு "தொடர்ந்து நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னர், வவனியா, திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வாழும்தமிழ் அகதிகளுக்கும் யாழ் குடாநாட்டு அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணப் பெருட்கள் போன்றுஉணவுப்பொருட்களை வழங்குமாறு வேண்டுகிறோம். என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை' கோருவதென யாழ்ப்பாணத்திலுள்ள பொது ஸ்தாபனங்கள் தீர்மானித்துள்ளன.

யாழ் குடாநாட்டிலுள்ள இருநூற்றியம்பதிற்குமதிகமான பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட பொதுக்கூட்டமொன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்று நடைபெற்றது.

இலங்கை தமிழ் அகதிகட்கான உணவுநிவாரணம் குறித்து நீண்டநேரம் ஆராயப்பட்ட இக்கூட்டத்தின் இறுதியிலே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த பொது ஸ்தாபனங்களின் வேண்டுகோள் மகஜர் மூலம் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஷிற் மூலம் இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிவைக்கப்படவுள்ள மகஜரின் விபரம் வருமாறு: எங்களைப் பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்றியதற்காகபாரதத்திற்கு நாங்கள் மிகவும் நன்றியுடையவர்களாக இருக்கிறோம். இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்து இரக்கமற்றவகையில் அப்பாவிதமிழ் மக்களைகொன்றும் இருப்பிடங்களை அழித்தும் வருவதனுல் இலட்சககணக்கான மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

வீடிழந்து வேலையின்றி அகதி முகாம்களில் சுகாதாரமற்ற சூழலில் வாழ்வதால் பலர் சுகயீனமுற்றுள்ளார்கள் இந்நிலையில் எங்கள் உடலுடன் உயிரை வைத்திருப்பதற்காக வேனும் உணவு நிவாரணத்தைத் தொடர்ந்தும் வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு மட்டுமல்ல கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னர், வவனியா ஆகிய மாவட்டங்களிலும் நீண்டகாலமாக துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலிருக்கும் மக்களுக்கும் இந்தியாவின் உணவு நிவாரணங்களையும் மருத்துவ வசதிகளையும் வழங்கும்படி வேண்டுகிறோம்.

## மஹா சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு. யாழ் நீராவியடி கடையிற் சுவாமி சமாதிச் சிவாலய தேவஸ்தான தெட்சணுமூர்த்தி மஹா சங்காபிஷேகம் இன்று காலே நடைபெறும்

இவ்விழாவில் ஆத்மஜோதி நா. முத்தையாவின் சிறப்புரை நிகழ்ச்சியும் இடம் பெறும். [சி]

## மருத்துவர் வேலைநிறுத்தம்

# வைத்தியசாலைகளில் விசேஷ பொலிஸ் குழுக்கள் ரோந்து

'கொழும்பு' வைத்தியர்கள் வேலை நிறுத்தம் மேற்கொள்ளும் ஆஸ்பத்திரிகளில் பாதுகாப்புக்காக விஷேட பொலிஸ் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

அரசாங்க தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கு வழங்கப்படும் எம். பி பி. எஸ் பட்டம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையடுத்து அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த புதன்கிழமை முதல் வேலைநிறுத்தமொன்றினைமேற்கொண்டு வருவது தெரிந்தகே நாட்டின் 19 வைத்தியசாலைகளில்இவ்வேலைநிறுத்தம் இடம்பெற்று வருகின்றது.

இவ் வைத்திய சாலைகளில் நிறுத்தப்பட்டுள்ள பொலிஸார் அமைதியை நிலைநாட்டும்பணியில் ஈடுபட்டுள்ளனர் ஆஸ்பத்திரி வளவினுள் அவர்களின் ரோந்து இடம் பெறும்.

இவ்வேலை நிறுத்தத்தினுல் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர் கோபத்தில் வன் செயல்களில் இறங்கக்கூடும் என அஞ்சப்படுவதாலேயே இந்த ப பொலிஸ் குழுக்களை நிறுத்த முடிவு செய்ததாக தெரியவருகிறது. (ஊ)

## தமிழர்நிலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நுழைய அரசு அனுமதி வழங்க மறுத்ததையடுத்து அவ் விமானத்திலேயே திரு. சோல்க் இந்தியா திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

காரணம் எதுவும் கூருது தனக்கு இலங்கை அரசு அனுமதி மறுத்துள்ளதாக கூறிய பேராசிரியர், ஜெர்மன் பத்திரிகைகளில் தமிழர் நிலைவரம் குறித்து தான் எழுதிவரும் கட்டுரையே இதற்குக் காரணமாயிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். அண்மையில் நோர்வே நாட்டவர் ஒருவர் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டதும் தெரிந்ததே. [சி]

## இனப்பிரச்னே

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வாக விளக்கியதுடன் டிசம்பர் 19 யோசனைகளை இந்தியா வரவேற்பதுடன், பேச்சுவார்த்தைக்கு அது ஒரு நல்ல அடிப்படையென இந்தியா கருதுவதாகவும் தெரிவித்துள்ளாரென இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரு மாநிலமாக இணைத்துச் சுயாட்சி வழங்குவதற்கான திட்டத்தையும் இந்தியா வலியுறுத்தியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசு தரப்பினருக்கும், இந்திய உயர்ஸ்தானிகருக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையிலேயே இலங்கையின் புதிய யோசனைகள் அடங்கிய விஷேச செய்தி பிரதமர் காந்திக்கு அனுப்பப்பட்டிருக்கலாமென்று அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இனப்பிரச்னை தீர்வுக்கான புதிய யோசனைகளை இலங்கை அரசே முன்வைக்கவேண்டும் என்றும் இந்தியா எந்தவொரு யோசனையையும் தெரிவிக்காதெனவும் புதுடில்லி கடந்த சிலவாரங்களாக இலங்கை அரசுக்குக் கூறிவந்துள்ளது. (சி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.

## உல்லாசப்பயணம் மேற்கொண்ட

# 14 இஸ்ரேலிய பயணிகள் இந்தியாவில் நுழைய தடை

[புதுடில்லி] உல்லாசப் பயணம் மேற்கொண்டு இந்தியா வந்த 14 இஸ்ரேலியர்கள் இந்தியாவிற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு விஸா வழங்க மறுக்கப்பட்டதையடுத்து புதுடில்லியிலுள்ள இந்திரா காந்தி சர்வதேச விமானநிலையத்தில் அனைவரும் பலத்த பாதுகாப்புடன்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல், இந்தியாவினுல் அங்கீகரிக்கப்படாத ஒரு நாடு வழமையாக இந்தியாவில் இஸ்ரேலியர்களுக்கு விசா வழங்கப்படுவதில்லை. எனினும் தமக்கு விசா கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்த உல்லாசப் பயணிகள் இத்தியா வந்தனராம்

இதேவேளை இஸ்ரேலிலிருந்து பாரிஸினூடாக பத்திரிகையாளர்களை உள்ளடக்கிய 12 பேர் கொண்ட குழு ஒன்று இந்தியா வரத் தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இவர்களும் இந்தியாவினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்களென்றும்இந்திய அரசு அறிவித்துள்ளது. [ ]

## "பாதுகாப்பு அச்சுறுத்தல் முயற்சிக்கு

# இந்தியா தக்க பதிலடி கொடுக்க தயங்காது"

(புதுடில்லி) இந்தியா என்றும் அயல் நாடுகளுடன் சமாதானத்தையும் நல்லுறவையுமே விரும்புகிறது ஆனுல் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் எந்த முயற்சிக்கும் தக்க பதிலடிக் கொடுக்கத் தயங்காதென இந்திய பாதுகாப்பமைச்சர் திரு. கே. சி. பந்த் தெரிவித்துள்ளார்.

சண்டிகரருகே மேற்கத்திய இராணுவ தலைமையகத்தில் நேற்று படைவீரர்களிடையே உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் எந்தவொரு நிலையையும் எதிர்கொள்ள எப்போதும் விழிப்புடன் தயார் நிலையிலிருக்குமாறு அவர் படையினரைக் கேட்டுக் கோண்டார். (சி)

## மாவிட்டபுரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரண உதவியும்24-7-87ம் திகதி வழங்கப்படும்.

பழை, வீமன்காமம் கிராம சேவர் பிரிவிற்கான வறுமை நிவாரண உணவு முத்திரைகள 22- 7- 87 அன்றும் இருவார அரசாங்க நிவாரணம் 20- 7- 87ம் திகதியும் வழங்கப்படவுள்ளது.

மயிலிட்டி வடக்கு கிராம சேவர் பிரிவு மக்களுக்கான இருவார நிவாரண உதவி 26- 7- 87 அன்று வழங்கப்படும். [ரா]

# சவூதியிலிருந்து திரும்பிய வடமராட்சி இளைஞர்கள்

## கொடிகாமத்தில் உறவினர்களை தேடுகிருர்கள்

(யாழ்ப்பாணம்) வடமராட்சி பகுதியிலிருந்து கடந்த இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் சவூதி அரேபியா சென்ற இருபத்தைந்து வடமராட்சி இளைஞர்கள் நேற்று சவூதியிலிருந்து வடமராட்சி நோக்கி வந்தார்கள்.

விலையுயர்ந்த பொருட்களுடன் வந்த இவர்கள் வடமராட்சி நிலையை அறிந்து கொடிகாமத்தில் தங்கி நின்று தமது உறவினர்களைத் தேடிக் கொண்டிருக்கிருர்கள்

இந்த இளைஞர்கள் கொடிகாமத்தில் வந்து இறங்கியவுடன் நூற்றுக்கணக்கான மக்கள் இவர்களை சூழ்ந்து கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

கொடிகாமத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கி நிற்கும் இவர்கள் சவூதி அரேபியாவிலிருந்து இமமாதம் 25-ம், 28-ம் திகதிகளில் இன்னும்பல இளைஞர்கள் தமது ஒப்பந்த வேலை முடிந்துள்ளமையால் நாடு திரும்பவுள்ளதாகத் தெரிவித்தார்கள்.

மேலும் சவூதி அரேபியாவில் வடபகுதி இளைஞர்கள் கூடுதலாக கடமையாற்றும் கொம்பனி மூடப்பட்டுள்ளதால் பல இளைஞர்கள் நாடு திரும்புவார்கள் என்றும் கூறினார்கள். (ஒ

# மரண அறிவித்தல்

### டாக்டர். க. கிருஷ்ணர்

வட்டுக்கோட்டை முன்னுள் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் டாக்டர் கந்தையா கிருஷ்ணர் காலமானுர். அன்னர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கோகுலபாலன் (கணக்காளர், சிலோன் (F) பான்ஸ் லிமிட்டெட்) முருகதாசன் (பதில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர், வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புத்தந்தையும் பாலபூபதி, இந்திராணி, ஆகியோரின் அன்பு மாமனுரும், துர்க்கா, ஷோபனு, சங்கீதா, சுசுணு, சிவசெந்தில் ஆகியோரின் அன்புப் பேரனுரும், ஜெயவீரசிங்கம் (இளைப்பாறிய புகையிரத இலாகா உத்தியோகத்தரின்) அன்புச் சகோதரரும் ஆவார். இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். தகவல்: கி முருகதாசன். (சி-9915)

### திருமதி அருளம்பலம் மகேஸ்வரி

அரியாலையைச் சேர்ந்த இளைப்பாறிய வைத்திய கலாநிதி திருமதி மகேஸ்வரி அருளம்பலம் 15-7-87 அன்று லண்டனில் காலமாகிவிட்டார். அன்னுர் காலஞ்சென்ற கு. முத்தையா, நவரத்தினம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும் திருமதி மீரா, தெய்வேந்திரா திருமதி அமிர்தாபசுபதி, அசோகன் ஆகியோரின் அருமைத்தாயாரும், குமாரசாமி, மகாதேவா, சிவப்பிரகாசம், திருமதி ஞானேஸ்வரி மகாதேவா ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 16-7-87 அன்று லண்டனில் நடைபெற்றன. தகவல்: தாயார். 63, ஆனந்தம் வடலி ரேட். அரியாலை. (சி- 9928)

### திருவாளர் சின்னுர் இராசையா

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் மயிலு ஒழுங்கையைச் சேர்ந்த சின்னுர் இராசையா அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் காலம்சென்ற பிள்ளையம்மாவின் அன்புக்கணவரும், நடராசா [உரிமையாளர் முருகன் எலற்றிக்கல் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்] காலஞ்சென்ற கமலபூபதி, காலஞ்சென்ற நவரத்தினசிங்கம், துரைசிங்கம் புவனேஸ்வரி, செல்வநாயகம் சற்குணதேவி [புனிதம்] ஆகியோரின் அன்புத் தகப்பனுரும், நாகரத்தினம், நவரத்தினம் ஆனந்தநாயகி (மணி), குலசிங்கம் (நீர்கொழும்பு நியூ செலக்சன் பங்காளர்), மகாதேவா ஆகியோரின் மாமனுரும் ஆவார். அன்னுரின் பூதவுடல் (இன்று) 19- 7- 87 பி. ப. 2 மணியளவில் அன்னுரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும். (சி-9930) தகவல்: இ. நடராசா.